

# தேனோலை

பதிப்பாசிரியர்:
**கொடுமுடி சண்முகப் பிரகதம்**



முதல் இதழ்

1974 ஜூலை

# தேனோலை

பழஞ்சுவடிக் காலாண்டிதழ்

இதழ் ஒன்று — சூலை 1974

1. மதுக்கரைப் பட்டயம்
2. யிருவத்தி நாளு நாட்டுப் பட்டயம்

விலை ரூ. 1-00
ஆண்டுக் கட்டணம் ரூ. 4-00
மூன்றாண்டுக் கட்டணம் ரூ. 10-00
ஆயுட் கட்டணம் ரூ. 100-00

பதிப்பாசிரியர்
கொடுமுடி சண்முகப் பிரகதம்
26, இந்திரா நகர்,
சென்னை-600020.

கொங்கு

*அறிவியல் வரலாற்றுத் திங்களிதழ்*

*ஆண்டுக் கட்டணம்* ரூ. 3-50

தேனோலை

*பழஞ்சுவடிக் காலாண்டிதழ்*

*ஆண்டுக் கட்டணம்* ரூ. 4-00

**கொங்கு வெளியீடுகள்**

ஆய்வுத் தேன் ரூ. 4-00

மதுக்கரைப் பட்டயம் ரூ. 3-00

*ஆசிரியரும், வெளியீடுபவரும் :*

**கொடுமுடி சண்முகப் பிரகதம்**

*26. இந்திரா நகர்,*

**சென்னை-600020.**

*அச்சிட்டோர் :*

**நாரா. நாச்சியப்பன்**

**நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்,**

**சென்னை-600014**

# மதுக்கரைப் பட்டயம்

# மதுக்கரைப் பட்டயம்

சுபமஸ்த்து சொஷ்த்திரி[1] விசையாற்புதம் [2]கலியுக சகாற்புதம் 4360 மேல் [3]சாலியவாகன சகாற்புதம் 1307 விசைய ஸு மார்கழி 17தேதி தேட்ஜனுயம் பூருவ பஷ்ச திதியும் திருவோண நட்செதிர மும் ஞ்சுபநாம யோகமும் பாலவ காறணமும் கும்ப லக்கினமும் பெற்ற சுபதினத்தில் இந்த சாசனம் யெளுதினது.[4]

கலியுகம் ஆதியில் பிறதமை பாதத்தில் பூச்சக்கிற வற்த்திகளாகிய பரிசித்து மகாருசா, செனமே செய ருசன், நறேந்திர விக்கிறமாதித் தன், போசராசன், சேற ருசன், சோள ருசன், பாண்டிய ருசன், அன்னதேவருயர், பிறதாப ருத்திரருயர், நறசிம்ம ருயர். கிஷ்ட்டன ருயர் அரிகற ருயர்[5],

மகாமண்டலாதிபதி சுபருடைள ருயர் காரியத்துக்கு கற்தருகிய சேற ருசன், சோளருசன், பாண்டிய ருசன் திருமகீனுயக்கர், வெங்கிடபதி னுயக்கர், கிஷ்டனபானுயக்கர் இவர்கள் எல்லாருங் கூடி மூன்று ருசாக்களுக்கும் யெல்லை பிரிச்சது மதுக்கரையில்.[6]

---

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. கலியுக சகாப்தம் 4360 (கி. பி. 1259)
3. சாலிவாகன சகாப்தம் 1307 (கி. பி. 1385)
4. இதில் கூறப்பட்ட கலியுக ஆண்டும், சாலிவாகன ஆண்டும் ஒத்துவரவில்லை. எனவே பட்டையத்தின் காலம் ஐயத் திற்குரியதே.
5. அரச பரம்பரை வரலாற்றின் அடிப்படையில் இல்லை. பரிசித்து, செனமேசெயன் இருவரும் மகாபாரதத்தில் கூறப்படுபவர். விக்ரமாதித்தன், போசராசன் இருவரும் வடக்கத்திய மன்னர்கள். கதைகள் மூலம் தமிழகத்தில் பிரபலமானவர்கள். இராயர் வகையினர் விசயநகர மன்னார்கள்.நாயக்கர்கள் அதற்குப் பின் மதுரை, திருச்சியில் இருந்தவர்கள். சேரன், சோழன், பாண்டியன் எல்லோரும் தத்தம் நிலை இழந்துவிட்டகாலம். இந்தப் பட்டயம் ஆங்கி லேயர் வருகைக்கு முன் சுமார் 300 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டிருக்கலாம்.
6. பல நூறு ஆண்டுகட்டு முன்னர் நடந்த செய்தி கூறப்படு கிறது.

மதுக்கரைக்கும் மேற்கு, மலையாளத்துக்கும் கிளக்கு, பாலமலைக்கும் தெர்கு, பழனிமலைக்கும் வடக்கு உள்பட சேறமான் சீமையென்றும்[1] வென்பா-வடக்குப் பெரும்பாதை, வயிகைவூருக்குந் தெர்கு குடகு பொருப்பு வெள்ளிக் குண்டு, கடல்க்கரைசூள்களித் தெண்டலை மேவுங் காவேரி சூள்னாடு குளித் தேன்றலை னூத்தென்பது காதங் கொங்கு[2] யென்று யெல்லை பிரிச்சி கொங்கு 24 நாலு நாடு யென்றும் பேருங் கொடுத்து

தென்திசைக் குடியானபேரையும் மதுக்கரைக்கு அழைத்து கொண்டு வந்து கொங்கு வேளாளறென்றுஞ் சேற ருசனும் ருயரும் பேரு கொடுத்து நாடு பிரித்து

தென்ங்கரை நாடு வேனுவுடையா கவுண்டர், காங்கயனாடு காங்கய மன்ருடியார், பல்லவருய கவுண்டர் சக்கரைக் கவுண்டர், பூந்துரை நாடு வாறணவாசி கவுண்டர், அரையநாடு தீத்தாக் கவுண்டர், மணநாடு காளியப்ப கவுண்டர், வேங்கலநாடு காளத்தியப்ப கவுண்டர், நீலியப்ப கவுண்டர், தட்டையனாடு ருசியண கவுண்டர், கிளங்குனாடு செம்பா கவுண்டர், தலையனாடு பெரியாக் கவுண்டர், வல்லைய கவுண்டர், அணடநாடு பெரிய தம்பிக் கவுண்டர், வய்யாபுரிநாடு மங்கலக் கவுண்டர், பழனிக் கவுண்டர், நல்லூரக்க நாடு, மலையாண்டி கவுண்டர் ஆனமலைநாடு,

---

1. இது கொங்கு நாட்டின் எல்லைதான்.
2. வடக்கு தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று—கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவும் கொங்கு (தனிப்பாடல்).

இதுவே வெண்பாவின் அசல் வடிவம். இந்த வெண்பா படும் பாடு, ஓலை எழுதியவரின் புலமைக்கு எடுத்துக்காட்டு!

வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்பு வெள்ளிக் குன்று—கிடக்கும்
களித்தண் டலைமேவு காவிரிசூழ் நாட்டுக்
குளித்தண் டலையளவு கொங்கு

(கொங்கு மண்டல சதகப் பதிப்பு)

2. கொங்கு நாட்டின் ஒரு எல்லையாக மதுக்கரை கருதப் பட்டது. கொங்கு மண்டல சதகத்தில்வரும் பாடல் இது.

மதிற்கரை கீட்டிசை தெற்கு பழனி மதிகுடக்குக்
கதித்துள வெள்ளை மலைபெரும் பாலை கவின் வடக்கு
விதித்துள நான் கெல்லை சூழ வளமுற்று மேவிவிண்ணோர்
மதித்திட வாழ்வு தழைத்திடு நீள் கொங்கு மண்டலமே.

காலிங்கருய கவுண்டர், கோப்பண கவுண்டர், பொன் குளிக்கனுடு தெய்வசிகாமணிக் கவுண்டர், நரையனூர்நாடு நஞ்செய கவுண்டர், வாறக்கனுடு பொன்னப்ப கவுண்டர், ஒடுவங்கனுடு வேலுமணிக் கவுண்டர், காஞ்சிக் கோவில் னுடு காசிக்கவுண்டர், பறுத்திப் பள்ளினுடு பழனிமலைக் கவுண்டர் குருப்பனுடு ருசியண கவுண்டர், பூவாணிநாடு, குமறவேலுக் கவுண்டர், ருசிபுரனுடு நல்லதம்பிக் கவுண்டர், வடகரைனுடு சின்னத்தம்பி கவுண்டர், வாளவந்திருடு செம்பாக் கவுண்டர் யிப்படி யிருப்பதினலு னுடும் யெல்லை பிரித்து

யிந்தப்படி சரி யிருபத்தினலு நாட்டு கவுண்டருக்கும் கட்டுக்கல்லை யும், அளைப்பித்துக் குடுத்து அவர்களுக்கு பிளைப்புங் குடுத்து அவர் கள் யெந்தப் பிறகாறம் குடியான பேர்களும், நாட்டுக் கவுண்டர் களும் யெந்தப்படி தவிருமல் நடந்துக் கொள்குறேமென்று தொளி லாளிகள் அனைவோருஞ் சொன்னுற்கள். 24 நாட்டு கவுண்டர்களும் உங்களுக்கு சீவனத்துக்கும் நடத்திக் குடுக்குறே மென்றும் நம்பிக்கை சொல்லிக் குடுத்தார்கள்.

அப்படியிருக்கிறபோது 24 நாட்டுக் கவுண்டர்களும், நம்மளுக்கு[1] நவபாண்டம் வேணுமென்கிறதாக யோசனை செயிது 24 நாட்டுக் கவுண்டர்களும் நாட்டுக் கொருத்தர் [2]பாண்டியத் தேசத்துக்குப் போய்[3] வேள்க்கோபரை அழைத்து

நீங்கள் நம்ப கொங்கு னுட்டுக்கு குடியேறவேணுமென்கிற தாக 24 நாட்டுக் கவுண்டர்களும் கேள்க்க அதுக்கு வேள்க் கோபர்

நாங்கள் இவ்விடத்தில் அண்ணன் தம்பி மாமன் மயித் துனன் இவர்களெல்லாரையும் விட்டு நாங்கள் யெப்படி உங்கள் நாட்டுக்கு குடிவாறது யென்று வேள்க்கோபர் சொல்ல அதுக்கு 24 னுட்டு கவுண்டர்கள் சொன்னது

யெங்களுக் குண்டானபடி தவிருமல் காணியாட்சி சாதனப் பட்டயம் நாடும் ஊரும் காணிபூமி மண்ணுமனை யெங்களுக் குண்டானபடி தவிருமல் காணியாட்சி சாதனப் பட்டயம் யெளுதிக் குடுக்குறேமென்றும் மதுக்கரை செல்

1. நவபாண்டம் புதுமைமிக்க மண் ஏனங்கள்.
2. செவிவழிச் செய்தி 'சோழநாடு' சென்று அழைத்து வந்த தாகும். சோழன் பூர்வ பட்டயத்தோடு ஒப்பிடலாம்.
3. வேட்கோவர்

லாண்டியம்மன் முன்ம்பாக நம்பிக்கைப் பிறமானமுஞ் சொல்லிக் குடுக்குரோம் மென்றும்

அழைத்துக் கொண்டு வந்து 24 ஞாட்டுக்கு 24 பேரை அழைத்துக் கொண்டு வந்து அப்போது கொங்கத் [1] திருநீலகண்டரென்று பேருங் கொடுத்தார்கள்

யெங்களுக்கு உடந்தையாக வேணுமென்று கேள்க்கும் போது கொங்கு வேளாளருங் கொங்கத் திருநீலகண்டரும் 24 ஞாட்டு கவுண்டர்களும் உடந்தைபோகி சரியென்று சொன்னார்கள்.

உடந்தை யென்கிறது யென்னவென்றால் 24 ஞாட்டு கவுண்டர்களும் கலியாணத்துக்கு யெங்கள் சீருபாதி செய்து கொள்ளுங்கோள் [2]பாதிசீறு யென்னவென்றால் குப்பாரி கொட்டி வாறதும், காமோதிரம் போடறதும், ஞாட்டுக்கல்கல்லுக்கு பெண் எடுத்துக் கொண்டு போயிவாறதும், மாப்பிள்ளை குதிரை யேரி, பெருந்தாலி கட்டுறது, காவிழங்குறது பெண் அழைக்கிறதும் இந்த ஆருவகை சீரும் செயிது கொள்ளுங் கொளென்றும் 24 ஞாட்டுக் கவுண்டர்களும் சொன்னார்கள், யிதுவுஞ்சரி யென்று உங்கள் சாதியில் நடக்குறது சீரெல்லஞ செயிது கொள்ளுங்கள் அப்பால் திண்மையாண் காலியத்துக்கு கொங்கு வேளாளர் சீருஞ் செய்து கொள்ளுங்கள் யிதுவும் நீங்கள் ஊருக்கொருவர் குடியிருக்குற படியினாலே,

---

1. திருநீலகண்டர் 63 சைவ நாயன்மார்களுள் முதன்மையானவர். திருவாரூரில் வாழ்ந்தவர். திருத்தொண்டத் தொகையில் பெயர் குறித்த வரிசையில் முதலாமவர்.

   தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்.
   திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்.
   —திருத்தொண்டத் தொகை.

   பெரிய புராணத்தில் இவர் வரலாறு விரிவாகச் சொல்லப் படுகிறது.

2. கொங்கு வேளாளருக்குரிய சீர்வகைகளில் இந்த ஆறும் மிகவும் முக்கியமானவை. வேட்கோவர் தமது சீர்செய்து கொள்வதோடு வேளாளரின் சீர்களையும் செய்து கொள்ள அனுமதித்தனர். இப்போதும் அவை நடைபெற்று வருகின்றன.

[1]கொள்ளி கோடி யிறுவருக்கும் ஒன்னெ ஒன்னு, உங்குறது திங்குறதும் யிறுவருக்கும் ஒன்னு, கொள்குறது குடுக்கிறது பிறதியம்

யிந்தப் பிறகாரம் 24 நாட்டுக் கவுண்டர்களும் உடந்தையென்றுஞ் சம்மதி சொல்லிம் மதுக்கரை செல்லாண்டியம்மன் முன்பாக நின்று வலக்கை வாற்த்தை சொல்லி குடுத்தார்கள்

அப்பால் யெங்களுக்குச் சிவனத்துக்கு யென்ன விபறமென்று கொங்கத் திருநீலகண்டர் கேள்க்க அதுக்கு 24 நாட்டு கவுண்டர்களும்

உங்களுக்குக் கட்டுக் கருதும், களப்போரும், முரிக்கருதும், படுக்கைக் கருதும், நோம்புக்கு வீட்டுக்கு ரெண்டுபடி நெல்லும், அயினூர் கோயில் கன்னிமாற் கோயில், மன்னத்துப் பொங்கல், பட்டதலட்சி, கிருமசாந்தி, முத்தாலம்மன் யிதுவெல்லாம் நீங்கள் பூசை செய்து செல்வளி

உங்களுக்குச் சொல் சுவந்திரம்,
கூவியேருக்கு நாலு வள்ளம்

இதுவெல்லாம் நிகுதி செய்து கொடுத்து உங்களையும் ஆதரவு பண்ணிக்கொள்குறோம் மென்று 24 நாட்டுக் கவுண்டர்களுஞ் சொல்லி கொங்கு வேளாளருக்கும் கொங்குத் திருநீலகண்டரென்றும் பேருங்கொடுத்து கொங்கு யிறுபத்திநாலு நாட்டுக்கும் அந்தந்த நாட்டாரை அந்தந்த நாட்டுக் கவுண்டர்கள் அழைத்துக்கொண்டு போகவும், கொங்கத் திருநீலகண்டரை

நீங்கள் யெங்கள் கலியாணத்துக்கு யென்ன குடுக்கிறது யென்றும் 24 நாட்டுக் கவுண்டர்கள் கேள்க்க அதுக்கு கொங்கத் திருநீலகண்டர்

நீங்கள் யெந்தப் பிறகாறம் சொன்னீர்களோ அந்தப் பிறகாறம் கேள்க்குறோமென்றுஞ் சொன்னார்கள்.

எங்கள் கலியாணத்துக்கு ஒரு பணத்து சிறப்பு வைத்தால்

---

1. வேட்கோவர் தமக்கு எல்லா விதத்திலும் சமம் என்ற உரிமையை வழங்கி இறந்து போனால் கொள்ளி, கோடி இருவருக்கும் ஒன்று என்றும், உணவிலும் சமத்துவம் என்றும் உரிமை வழங்கினர். ஆனாலும் திருமண உறவு மட்டும் இல்லை.

| | |
|---|---|
| மிடா | 4 |
| பருப்புத்தாளி | 2 |
| தன்னீர்ச்சாலு × | 1 |
| பெரியசாலு | 1 |
| தன்னீர்குடம் | 4 |
| தாளி | 4 |
| (கரை) கரிச்சட்டி | 4 |
| உரிச்சட்டி | 6 |
| நெயிக்கலெயம் | 2 |
| பெரிய தட்டச்சட்டி | 1 |
| தண்ணீர்க் கலெயம் | 4 |
| ஆக உருப்படி | 33 |

யிந்தப் பிறகாறம் நீங்கள் கொடுக்கிறது. யிதுக்கு நாங்கள் கொடுக்கிறது யென்ன வென்றுல் ஒரு பணத்துச் சிறப்புக்கு ரெண்டு வள்ள அரிசி ஒருவள்ளப் பருப்பு, யெட்டு வட்டுக் கருப்பட்டி, நெயிப்படி ½ பணம் ஒன்னும் இந்த பிறகாரம் நாங்கள் கொடுக்கிறது யிதுக்கு ஒரு பணமும் பாக்கு வெத்திலெயும் குடுத்தால், சுண்ணும்பு சாத்தி, வாசலிலே கொண்டுபோயி வயிக்கவும், யில்லாதிருந்தால் வாசலில் கொண்டுவந்து வயிக்குறதில்லெயென்று சொல்லிப்போடவும்.

இந்தச் சிறப்பு ஒரு பணம் முதல் 5 பணம் வறைக்கும் வாசலில் சீருக்கு

| | |
|---|---|
| மிடா | 20 |
| பருப்புத்தாளி | 10 |
| தண்ணீர் சாலு | 5 |
| பெருசாலு | 5 |
| தண்ணீர் குடம் | 20 |
| [1] கரைச்சட்டி | 20 |
| உறிச்சட்டி | 30 |
| நெயிக்கலெயம் | 10 |
| பெரிய தட்டைச்சட்டி | 5 |
| தண்ணீர் கலெயம் | 20 |
| ஆக உருப்படி | 165 |

இந்த மேறைக்கு நீங்கள் வச்சதே யானுல் நாங்கள் குடுக்கிறது சீரு என்னவென்றுல்

1. இங்கே தாளி 20 விடுபட்டுள்ளது. அதைச் சேர்த்தால் மொத்த எண்ணிக்கை 165 ஆகும்.

| | |
|---|---|
| அரிசி வள்ளம் | 10 |
| பருப்பு வள்ளம் | 5 |
| கருப்பட்டி வட்டு | 30 |
| நெய்படி | 2 |
| பணம் | 5 |

இந்த செல்வளி சுவந்திரம் மெல்லாம் கலியாண வாசலில் குடுத்து அனுப்புகிறதும்,

மடைக்கலப்பானை வைத்து கலியாணம் பண்ணினால் மாப்பிளைக்கு

| | | |
|---|---|---|
| மடைக்கலப் பானை | | 5 |
| ஆயிறப் பெருந்தாளி | | 1 |
| கறகம் | | 1 |
| இதுக்கு அரிசி படி | 5 | |
| பருப்பு படி | 3 | |
| கருப்பட்டி வட்டு | 3 | |
| பெண்வீட்டுக்கு மடைக்கலப்பானை | | 3 |
| ஆயிரம் பெருந்தாளி | | 1 |
| கறகம் | | 1 |
| இதுக்கு சுவந்திரம் அரிசி படி | 3 | |
| பருப்பு படி | 1 | |
| கருப்பட்டி வட்டு | 3 | |

இந்தப் பிறகாறம் [1] கயிமேல குடுக்கிறது.

பலபட்டரைச் சாதியில்கலியாணம் செய்தால் ஆணை அறசாணி வையித்தே யானல்

| | |
|---|---|
| ஆணைக்கி பணம் | 5 |
| அறசாணி சாலு | 1 |
| கறகம் | 1 |
| [2] வாழைப் பூ | 1 |
| கறகக் குடம் | 1 |
| சின்னப்பானை | 1 |

1. கடன்கிடையாது கைமேல் கொடுக்கவேண்டும்.
2. வாழைப் பூ வடிவில் உள்ள மேல் கூம்பு.

இது [1] எளுதி வையித்தால் [2] கணந்திரப்புக்கு

| | |
|---|---|
| அரிசி வள்ள | 1 |
| பாக்கு படி | ½ |
| வெத்திலெ கெவளி | 1 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |
| வெல்ல அச்சு | 1 |

இதுவெல்லாம் வாசலுக்கு கொண்டு வந்து முன்னே வையித்தால் கண்ந்திறந்து கலியாண வாசலுக்கு கொண்டுபோயி வைக்கவும். இதுக்கு மணம்

| | |
|---|---|
| பொங்கல்பானெ உருப்படி | 5 |
| இதுக்குப் படி அரிசி வள்ளம் | 1 |
| பருப்பு படி | 1 |

கம்மாற வடுக ஞயக்கண் கலியாணத்துக்கு

| | |
|---|---|
| யெளுத்துப் பானெ | 12 |
| மடக்கு | 12 |
| தண்ணீர்க்கலெயம் | 5 |
| வாழைப் பூ | 5 |
| தீபகெம்பம் | 5 |
| விளக்கு | 5 |
| [3] ஆக உருப்படி | 45 |

| | | |
|---|---|---|
| இதுக்கு சுவந்திரம் | அரிசி வள்ளம் | 1 |
| | பருப்பு (படி) | 5 |
| | பாக்கு | 10 |
| | வெத்திலெ | 25 |
| | பழம் | 10 |

---

1. ஆனெ, மற்றும் பாண்டங்களுக்கு, சுண்ணும்பு பூசி அதன் மீது வண்ணம் தீட்டுதல்.

2. கண்திறத்தல்: ஆனைக்கு எல்லா வண்ணமும் பூசியிருந்தாலும், கண்ணின் கருவிழி தீட்டியிருக்க மாட்டார்கள். சீர்களெல்லாம் வந்ததும் அவற்றை முன்னுல் வைத்து பூசை செய்யும் முன்பாக கண்ணின் கருவிழி தீட்டுவர். இதுவே கண்திறத்தல் ஆகும்.

3. இதில் ஒரு உருப்படி குறைகிறது. என்னவென்று தெரியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| | தேங்காய் | | 1 |
| இதுக்கு | பணம் | 2 | |

[1] சூரிய குல வம்ஸத்துக்கு கலியாணத்துக்கு எளுத்துப்பானை

| | | | |
|---|---|---|---|
| | பெரிய பானை | | 4 |
| | சின்னப்பானை | | 4 |
| | பெரிய மிடா | | 4 |
| | குடம் | | 4 |
| | புள்ளபானை | | 4 |
| | கறகம் | | 4 |
| | வாழைப் பூ | | 4 |
| | அரசாணிச் சாலு | | 4 |
| | குடம் | | 1 |
| | கறகம் | | 1 |
| | பொங்கப்பானை உருப்படி | | 5 |
| | தீபகம்பம் | | 12 |
| | பாலிகை | | 7 |
| | [2] ஆக உருப்படி | | 55 |
| யிதுக்கு | அரிசி வள்ளம் | 1 | |
| | பறுப்பு படி | 1 | |
| | பாக்கு | 10 | |
| | வெத்திலை | 20 | |
| | பழம் | 10 | |
| | தேங்காய் | 1 | |
| யிதுக்கு | பணம் | 8 | |

விஸ்வகுலத் தாசாரிகளுக்கு கலியாணத்துக்கு எளுத்துப்பானை

| | |
|---|---|
| சாலுக்குடம் | 1 |
| சின்னப்பானை | 1 |
| கறகம் | 1 |
| குடம் | 1 |
| வாழைப் பூ | 1 |
| மடக்கு | 1 |

---

1. சூரியகுல வமிசம் என்பது எந்தச்சாதி என்று தெரியவில்லை.
2. இதில் 8 உருப்படி அதிகமாக உள்ளது. அரசாணிச்சாலு 1 ஆக இருக்கலாம்.

| | |
|---|---|
| பாலிகை | 7 |
| நாகவல்லிக் கலசம் | 9 |
| பொங்கப்பானை உறுப்படி | 5 |
| ஆக உறுப்படி | 27 |

யெளுதி வைத்துக்கொண்டு யிதுக்கு ஆசாரிகள் கொண்டு வாறது யென்ன வென்றால்

| | |
|---|---|
| அரிசி வள்ளம் | 1 |
| பருப்பு வள்ளம் | $\frac{1}{2}$ |
| பாக்கு | 10 |
| வெத்திலை | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

யிதுவெல்லாம் வாசலுக்கு கொண்டு வந்து யெளுத்துப்பானை முன்னே வயித்ததானால் பூசை பண்ணி விஸ்வகுலத்தாசணிகள் அவர்கள் வீட்டுக்கு மேள வாத்தியத்துடன் யெடுத்துக் கொண்டு போகவும் [2] பணம் 3

சோளிய வேளாளர் கலியாணத்துக்கு

| | |
|---|---|
| சாலு | 1 |
| கறகம் | 1 |
| வாழைப் பூ | 1 |
| கறகுடம் | 1 |
| மேல் மூடி | 1 |
| மடக்கு | 1 |
| பாலிகை | 7 |
| பொங்கப் பானை உருப்படி | 5 |
| மஞ்சல் நீற்பானை | 1 |
| கலசம் | 1 |
| மங்(க)ல்லிய கூளப்பானை | 1 |

---

1. கவுண்டர்கள் வீட்டு கலியாண வாசலில் வேட்கோவர் பானைகளைக் கொண்டு போய் வைத்து சீா பெற்று வர வேண்டும். விசுவகுலத்தாசாரிகள் வேட்கோவர் வீட்டு வாசலில் வந்து பூசை செய்தபின் மேளதாளத்துடன் எடுத்துச் செல்லவேண்டும்.

| | |
|---|---|
| சட்டி | 1 |
| [1] ஆக உருப்படி | 21 |

யிதுக்கு

| | |
|---|---|
| அரிசி (படி) | 1 |
| பருப்பு (படி) | 10 |
| பாக்கு | 10 |
| வெத்திலே | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

யிதுவெல்லாம் வைத்துப் பூசை பண்ணி எடுத்துக்கொண்டு போகவும். இதுக்கு பணம் 2.

பாண்டிய வேளாளர் கலியாணத்துக்கு

| | |
|---|---|
| யெழுத்துச்சாலு | 1 |
| கறகம் | 1 |
| வாழைப் பூ | 1 |
| கறகக் குடம் | 1 |
| மடக்கு | 1 |
| பாலிகை | 7 |
| பொங்கப்பானே உருப்படி | 5 |
| மஞ்சல் நீற்பானே | 1 |
| கலசம் | 1 |
| மங்கிலியக் கூளப்பானே | 1 |
| சட்டி | 1 |
| ஆக உருப்படி | 22 |

இதுக்கு

| | |
|---|---|
| அரிசி (படி) | 1 |
| பருப்பு (படி) | ½ |
| பாக்கு | 10 |
| வெத்திலே | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

இதுவெல்லாம் முன்னே வைத்துப் பூசை பண்ணி எடுத்துக் கொண்டு போகவும். யிதுக்கு பணம் 2.

---

1. இதில் ஒரு உருப்படி அதிகமாகவே உள்ளது. கறகம் இரண்டு முறை கூறப்பட்டுள்ளது.

[1] ருஜாக்களுக்கு கலியாணத்துக்கு

| | |
|---|---|
| யெளுத்துப்பானை | 5 |
| வாழைப் பூவு | 5 |
| குடம் | 2 |
| யெளுத்து மிடா | 2 |
| மடக்கு | 5 |
| தீபகம்பம் | 7 |
| விளக்கு | 7 |
| யெளுத்துக் கலசம் | 7 |
| ஆக உருப்படி | 40 |

யிதுக்கு

| | |
|---|---|
| அரிசி வள்ளம் | 1 |
| [2] பருப்பு வள்ளம் | 5 |
| பாக்கு | 10 |
| வெத்திலை | 20 |
| பழம் | 10 |
| தேங்காய் | 1 |

வெல்லம் அச்சு 1 யிதுவெல்லாம் யெழுதிக்கொண்டுபோய் வாசலிலே வைக்கவும் யிதுக்கு பணம் 5

வடுக ஆசாரிகளுக்கு கல்யாணத்து

| | |
|---|---|
| எளுத்துப்பானை | 12 |
| மடக்கு | 12 |
| தண்ணீர்கலையம் | 5 |
| வாழைப் பூவு | 5 |
| தீபகம்பம் | 5 |
| விளக்கு | 5 |
| ஆக உருப்படி | 44 |

| | | |
|---|---|---|
| யிதுக்கு | அரிசி வள்ளம் | 1 |
| | பருப்பு வள்ளம் | ½ |
| | பாக்கு | 10 |
| | வெத்திலை | 20 |
| | பழம் | 10 |
| | தேங்காய் | 1 |

---

1. ருஜாக்கள் என்பது எந்தசாதி என்று தெரியவில்லை.
2. பருப்பு வள்ளம் ½ என இருக்கலாம்.

யிது வெல்லாம் எழுதி வைத்துக்கொண்டு அவர்கள் வருசை யெல்லாம் கொண்டு வந்து யெழுத்துப் பானைக்கு முன்னே வயித்து பூசை பன்னி அவர்கள்[1] மேல் வாத்தியத்துடன் எடுத்துக் கொண்டு போகவும் யிதுக்கு

| | |
|---|---|
| படியரிசி | 5 |
| பருப்பு படி | 1 |
| பாக்கு | 10 |
| வெத்திலை | 20 |
| சக்கறை படி | 5 |
| பளம் | 3 |

மற்ற பலர் பட்டறை சாதியில் கல்யாணத்துக்கு செய்யத்தேயானால் எந்தப் பிரகாரம் அவரவர்கள் சாதியில் யெந்தப்படி கேள்பார்களோ அந்தப் பிறகாரம் கேட்டு கல்யாணத்துக்கு முஷ்த்தீபுகள் எல்லாம் குடுத்து உனக்கு உண்டான வர்த்தனைகள் ளெல்லாம் கைமேலே வாங்கிக் கொள்கவும்

ஒரு பணத்துக்கு[2] உருவு விட்டால், ஒரு பணம், ஒரு படி நெல்லும், ஒரு வட்டுக் கருப்பட்டியும், பாக்கு வெத்திலையும் பழமும் வையித்து கண்திறந்து கோவிலுக்குக் கொண்டுபோய் வையித்தாலும் அதுக்கு ஒரு மிடாவும் ஒரு தாளியும் குடுத்து வறவும் இந்தப் பிரகாரம் நிகுதி செயிது யிருக்கிறோம்.

[3]குதிரைகள் பண்ணச் சொன்னால் பணமும் பாக்கு வெத்திலையும் பிடிமண்ணும் குடுத்தெயானால் அஞ்சு பணத்துக்கும் பண்ணச் சொன்னால் குதிரைக்கி அக்கினி மாலை சாத்துகிறபோது பொங்க லுக்கு 5 வள்ள நெல்லும், ஆட்டுக்கிடாவும், பாக்கு வெத்திலையும் பழ தேங்காயும் குடுத்துப் பொங்கல் வயிக்கவும் குதிரைக்கி வர்ண்ண சிலவுக்கு பணம் 1 பசுவின் பால் வள்ளம் 1 சுன்னும்பு சால் வள்ளம் 2 கண்திறப்புக்கு பணம் 1 ஒரு வள்ள நெல்லு ஒரு அச்சு கருப்பட்டி பாக்கு வெத்திலை பழ தேங்காய் சாம்பருணி யிது வெல்லாம் குடுத் தால் வர்ண்ண மெழுதி கண்திறக்கும்போது ஒரு ஆட்டுக் கிடாய் வெட்டிக் கோயிலுக்குக் கொண்டுபோய் வையிக்கவும்.

---

1. மேள
2. நோய் நொடி வரும்போது உருவாரம் (பொம்மை) செய்து செய்துவைப்பதாக கிராம தேவதைக்கு வேண்டிக் கொள் வார்கள். அதுவே உருவு எனப்பட்டது.
3. கிராமதேவதை, அய்யனார் கோயிலில் உள்ள மண் குதிரை.

கனியாட்டக் குதிரைகள் செயிதால் செலவு அஞ்சு வள்ள நெல்லு, ஆறு வள்ள கொட்ட முத்து, பருத்தி ஒரு தூக்கு, கருப்பட்டி ஒரு தூக்கு, ஆட்டுக்கிடாய் ஒன்னு இந்த சுவாதீனமெல்லாம் கொடுக்கிறது.

[1]மூப்பர்களுக்கு, முட்டி ஒரு பணத்துக்கு 60, மிடா ஒரு பணத்துக்கு 8, யிருதாளி 10, மூப்பர்கள் வருமானம் கொடுக்கிறது என்னவென்ருல் ஒரு பணத்துக்கு ஒரு மிடா கருப்பட்டி. ஒரு கோட்டை நொங்கு, ஒரு கூடை, [2]சேவாய் ஒரு கூடை.

[3]கேட்டிம் வீடு கட்டினல் பண்ணையத்து (க்கு) ஒரு பனையில் விழுகிற ஓலைகளும், சிறைகளும் கொடுத்துவிடுகிருேம். சிறப்பு அஞ்சு பணத்துக்கு மேல் வயிக்கச் சொல்லி சொன்னதை யாஞல் அரிசி வள்ளம் 10 பருப்பு வள்ளம் 5 கருப்பட்டி தூக்கு 1 நெய்ப்படி 2½ இது வெல்லாம் கொடுத்து ஒரு மாடு கண்ணுந்தாயும் கொடுக்கிறது.

[4]துரைகளுக்கு அம்மஞ்சி மணிய வேணுமென்ருல் படி போட்டால் மணிகிறது, படி போடாமல் போனல் நீங்கள் மணிய வேண்டியதில்லை.

கெடிவாசலில், பட்டணவாசலில், குளாய், மணிய வேணுமென்ருல் அறமனைக்கு ஆயிரம் பில்லைக்கு 5 பணம். குடியான பேற்களுக்கு குளாய் மணிய வேனுமென்ருல் ஆயிற பில்லைக்கு ஆரு பணம். இந்தப் பிறகாறம் நிகுதி செயிது இருக்கிருர்கள்.

[5]சன்னதி வாசலில் கிராம சாந்தி செயிகுறது கொங்கு திருநீலகண்டனே அல்லாமல் வேரை ஒருத்தர் செய்யப் போகாது. கிரும சாந்திக்கு கொடுக்கிற தென்ன வென்ருல் ஒரு பணம் காணிக்கை,

---

1. மூப்பர்—கள் இறக்கும் சாணுர்.
2. பனம்பழம் சுட்டது,
3. கெட்டி வீடு
4. அம்மஞ்சி மணிதல் என்ருல் என்னவென்று தெரியவில்லை.
5. கோயில் திருவிழாக்கள் தொடங்குமுன், நள்ளிரவில் ஊரைச் சுற்றி செய்யும் பூசை. இரத்தம் கலந்த சோற்றை நள்ளிரவில் கோயிலைச் சுற்றி எட்டுத் திசையிலும் உள்ள பேய்களுக்கும், பிற தேவதைகளுக்கும் அர்பணித்துப் பூசை செய்தல்.

[1]சோமனும், அஞ்சு வள்ள நெல்லு, ஒரு ஆட்டுக்கிடாய் ஒரு [2]விருகனும் பாக்கு வெத்திலே தேங்காய் பழம் சாம்பருணி இது வெல்லாங் குடுக்கிறது. கிருமங்களிலே யிறுக்கிற மணியகாறர் களுக்கு சாமானம் 1 உருப்படி 5 குடுக்கவு (ம்). இந்த வகை பிற காறங்களுக்கு யெல்லாம்ங் குடுக்குறது நாகற் பணம் குடுத்து அனுப்புகிறது.

[3] முத்தாலம்மன் செய்ய வேணுமென்றால் அதுக்கு பணம் மூணு. ஒரு பணத்து சித்தாடை, ஒரு [4]சோடு [5]கண்மலரு ஒரு சோடு பொட்டு [6]காறையும், கண் திறக்கும்போது ஒரு வள்ள நெல்லு ஒரு அச்சுக் கருப்பட்டியும் பாக்கு வெத்திலேயும் பழம் தேங்காயும் ஆட்டுக்கிடா யும் 1 இந்த சுவந்திறமெல்லாம் உண்டு செயிது குடுத்து இருக் கிறோம்.

இந்தப் பிறகாறத்துக்கு கொங்கு 24 நாட்டுக் கவுண்டர்களும், கொங்கத் திருநீலகண்டற் அனவோரையும் கூட்டி வைத்துக் கொண்டு சேறமான் பெருமாள், ருயரு, 24 நாட்டு குடியாணபேற் களும் கவுண்டர்களும், செட்டி வருத்தகர், பலபட்டரையும் கூடி [7]நிலே நாடுதலே செய்து கல்லும்ங் கவேரியும் புல்லும் பூமாதேவியும் [8]சந்திருதித்தனருள்ள காலத்திலும் இந்த சாசனத்தின் உண்டாகிய படி தவறாமல் செய்து கொள்குறோமென்று மதுக்கரை செல்லாண்டி யம்மன் முன்பாகவும், காவேரியம்மன் முன்பாகவும் வலக்கை போட்டுக் கொடுத்து விட்டோம்.

---

1. சோமன்-மேல்துண்டு-உயர்வகைத் துணியால் ஆனது.
2. விருகன்-வராகன் (பொன் நாணயம்)
3. நாயக்கர் குலதெய்வம் திருவிழாவின்போது பச்சை மண்ணால் அம்மன் உருவம் செய்து சுடாமல் பூசை செய் வர். திருவிழா முடிந்ததும் இறுதிநாள் ஆறு அல்லது கிணற்றில் இறக்கி விடுவர்.
4. சோடு-சோடி (இரண்டு)
5. கண்மலர்-வெள்ளியில் கண்போல் செய்த தகடு
6. காறை-காலில் அணியும் ஒரு வகை அணி.
7. நிலே நாட்டுதல்-உறுதிசெய்தல்
8. சந்திரன், சூரியன் உள்ளவரை

யித்தை [1]யிகருதம் பேசி, யில்லைப் [2]போய்யென்றும் சொன்ன பேர்கள் தங்களுடைய மாதாவையும், தங்களுடைய குருவுக்கும், தங்களுடைய குலதேவதைகளுக்கும் துரோகம் பண்ணினால் யெந்த பலனுண்டோ அந்தப் பலனுண்டாகும்.

அப்படி பாவதோசங்களுக்கு உள்படாமல் புண்ணியத்தை நினைத்தால் காசியில் கெங்கை தீர்த்தத்தில் [3]இபத்தாணம் செய்து காசி விஸ்வநாதரையும், [4]விசாலட்சுமியம்மனையும் சேவித்த பலன் பெறுவார்களாகவும். ராமேஸ்பரத்தில் தீர்த்தமாடி ராமலிங்கரையும் சேவித்த பலம் பெருவார்களாகவும், [5]மதுக்கரையில் தீர்த்தமாடி சொக்கனாதரையும் மீனாட்சியம்மனை சேவித்த பலன்ம் பெருவார்களாகவும், மதுக்கரையில் உடைய காவேரியில் தீர்த்தமாடி மதுக்கரை செல்லாண்டியம்மன் தீற்க்காயுசு புண்ணிய பாக்கியத்தைக் கொடுத்து [6]லச்சுப்பாருகவும். மதுக்கரை செல்லாண்டியம்மனும் காவேரியம்மனும் லச்சிக்கவும். திருநீலகண்டரும், [7]சிவகாமியம்மனும் லக்ஷிக்க வேணும். மாரியம்மனும் படை வேட்டியம்மனும் லக்ஷிக்க வேணும். சிவமயம்.

---

1. யிகருதம்-ஏளனம்
2. பொய் எனப் படிக்கலாம்
3. இபம்-யானை, யானையைத் தானம் செய்வதில்லை. பசுவை நினைத்து எழுதப்பட்டு இருக்கலாம்.
4. விசாலாட்சி என வாசிக்கலாம்
5. மதுரையில் என இருக்க வேண்டும்
6. லச்சுப்பார்-இரட்சிப்பார் (காப்பார்)
7. திருநீலகண்டரின் மனைவி

# பட்டயத் தமிழ்

மதுக்கரைப் பட்டயம் என்னும் இச்சுவடியினைப் படித்ததும் உள்ளத்தில் தோன்றும் எண்ணம் இது தமிழா? இந்தத் தமிழ் நமக்கு வேண்டுமா? இப்பட்டயத்தை அச்சிட்டு தமிழின் இனிமைக்கும் பெருமைக்கும் இழுக்குத் தேட வேண்டுமா?

இது தமிழ்தான். இன்றைய தமிழல்ல. குறைந்த அளவு ஒரு நூற்றாண்டிற்கு முன் தமிழகத்தில் பெரும் புலவர்கள் தவிர, எளிய மக்கள் வழங்கி வந்த தமிழ். பேச்சு வழக்கிலான திரிபுகள் எழுத்து வழக்கிலும் இடம் பெற்றுள்ளது. கல்லாமை பரவலாக இருந்த காலத்தில், படித்தவர்கள் ஒரு சிலரே இருந்த காலத்தில் கோலோச்சிய தமிழ். எனினும் இதிலுள்ள பிழைபட்ட வடிவங்களைச் செப்பம் செய்து மூல உருவங்களை உணர்ந்தால் உவப்பாக இருக்கும். நாட்டில் உயிருடன் வழங்கி வந்த நல்ல தமிழ்ச் சொற்கள் பலவற்றைப்பொறுக்கி எடுக்க முடியும். ஏட்டிலே தேடாமல், நாட்டுப்புறம் சென்று மக்கள் நாவில் புழங்கும் மொழியை ஆராய்ந்தாலே இதிலுள்ள பல தமிழ்ச் சொற்களின் உயிர்ப்பு விளங்கும். இதில்வடமொழியின் ஆதிக்கம் அதிகமாக இல்லை. ஒரோ வழி கலந்துள்ளது.

இந்தத் தமிழ் தமிழகத்து மொழி வரலாற்றை ஆராய்வோருக்கு மிகவும் இன்றியமையாதது. தமிழகத்தில் மணிப்பிரவாளம், படித்தவர்களிடையே ஆதிக்கம் செலுத்தியபோது பாமரர்களிடையே வழங்கிய தமிழாகலின் ஆராய்ச்சியாளர்களுக்கு இது ஒரு கருவூலம்.

இக்கால நாகரிக இளைஞர்கள் அணியும் ஆடை அழகுகளோடு நமது முப்பாட்டனாரின் மூலக்கச்ச வேட்டியும், வெற்றுடம்பும் எண்ணிப்பார்க்கவே கூச்சமாகத்தான் உள்ளது. அதற்காக அவர் நமது பாட்டனல்ல என்று சொல்வது பொருந்துமா? அதே போல இந்தச் சுவடிகளை எழுதியவனும் தமிழரே யாகலின் அதனை ஒதுக்குவது முறையல்ல.

தமிழகத்திலேயே ஒரு காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, முதலியவற்றை ஒரு பொருட்டாக மதித்தல் பிழையென்ற எண்ணம் நிலவியது. அதன்படி அவ்விலக்கியங்கள் போற்றுவாரின்றி அழிந்து போயிருந்தால் என்னவாகியிருக்கும்?

கொங்குவேளின் பெருங்கதையைக் கண்டு பிடித்த வரலாற்றை எழுதும்போது தமிழ்க்கிழவர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் எடுத்துக் காட்டும் செய்தி அறியற்பாலது. அவர் முன்னுரையில் ஒரு பகுதி.

"இலக்கணக் கொத்துப்" பாயிரம் 7 ஆம் சூத்திரத்தில், 'தொல்காப்பியர், திருவள்ளுவர், கோவையார், மூன்றிலு முழங்கும்' என்பதன் உரையில் 'திருவைக் கோவைக்குங் கூட்டுக; மாணிக்க வாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற்கு அலந்து இரந்து அருமைத் திருக்கையால் எழுதினர். அப்பெருமையை நோக்காது சிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேண் மாக்கத்தை முதலியவற்றோடு சேர்த்து அச்செய்யுட்களோடு ஒன்றுக்குவர்;... பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு இராமன்கதை, நளன்கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணி வாளுள் வீணுள் கழிப்பர்' என்று ஸ்ரீ சாமிநாத தேசிகர் எழுதியுள்ள பகுதியிற் காணப்படும் 'கொங்குவேண் மாக்கதை' என்பது ஞாபகத்திற்கு வந்தது. உடனே இராமாயணக் கதை முதலியவற்றைப் போலவே இது கொங்குவேளென்னுமொருவ னுடைய கதையாக இருத்தல் வேண்டுமென்று எண்ணி மேற் கூறிய உபகாரிகளைக் கேட்டு அப்புத்தகத்தை வாங்கி வைத்துக் கொண்டேன்."

"ஸ்ரீ சாமிநாத தேசிகர் வெறுத்துக் கூறிய வாக்கியப் பகுதி அப்பொழுது ஞாபகத்திற்கு வரவில்லையேல் இந்நூலை வாங்கி வைத்துக்கொள்வதற்கு இடமில்லை. அவர் வைதது இந்நூலுக்கு வாழ்த்தாக முடிந்தது. பெரியோர்களால் செய்யப்படும் அவ மதிப்பும் கௌரவமுடையதாகுமென்பது திண்ணம். எனவே தமிழில் வந்த எதையும் ஒதுக்காமல் பாதுகாத்தல் இன்றியமையாதது. வரலாறு தொகுக்கும்போது விருப்பு, வெறுப்பின்றி எல்லா ஆவ ணங்களையும் ஆராய்தல் வேண்டும். எனவே பிழை மலிந்த தமிழாக இருந்தாலும் அதைப் பதிப்பிக்க முனைந்தோம்."

நமது சின்னஞ்சிறு பிள்ளை சேற்றில் விளையாடி வரும்போது பார்க்கப் பொறுக்காது. எனினும் குளிப்பாட்டி எடுத்தபின் பொலிவு பெறுகிறதென்றோ? அவ்வாறே பட்டயத் தமிழிலும் பிழை நீக்கித் தமிழ் மூலம் கண்டு ஆராய்வோமாக.

# பட்டயச் செய்தி

1. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் நிகழ்ந்த சமுதாய ஒப்பந்தம் ஒன்றின் விவரம் தருகிறது இப் பட்டயம். செப்புப் பட்டயம் பழைய கோட்டைப் பட்டக்காரர் வசம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதன் நகல் ஓலைச்சுவடியில் கிடைத்துள்ளது.

2. இச்சுவடியைப் போற்றிப் பாதுகாத்து அளித்தவர் சேலம் சி.எஸ்.ஐ உயர் ள்ளித் தமிழாசிரியர் புலவர் கு. கந்தசாமி அவர்கள். இவரது சொந்த ஊர் இராசிபுரம்.

3. காலம்

பட்டயத்தில் ஒப்பந்தம் நடைபெற்ற காலம் கலியுகக் கணக்கிலும் சாலிவாகனக் கணக்கிலும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இரண்டும் ஒத்துவரவில்லை.

கலியுக சகாப்தம் 4360 — கி.பி. 1259

சாலிவாகன சகாப்தம் 1307 — கி.பி. 1385

இவ்விரண்டு ஆண்டுகளும் விசய வருடம் அல்ல. எனவே ஒப்பந்தம் செய்து கொண்ட அதே நாளில் பட்டயம் எழுதப்படவில்லை என்பது புலனாகும். முற்காலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று வழி வழியே வந்து பிற்காலத்தில் எழுதப்பட்டுள்ளது.

விசய வருடம், மார்கழி மாதம், பதினேழாம் நாள் தட்சிணாயனம், பூர்வபட்சம் திதி, திருவோண நட்சத்திரம், சுப யோகம் பால கரணம், கும்பலக்கினம் கொண்ட நாள் இப்பட்டயம் எழுதப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. இது பின்னாளில் பட்டயம் எழுத்து வடிவம் பெற்ற நாளாக இருக்கலாம்.

4. மன்னர்கள்

இதில் உள்ள அரச பரம்பரை

| | |
|---|---|
| பரிசித்து மகாராசா<br>செனமே செயன் | மகாபாரதத்தில் சொல்லப்படுபவர்கள் |
| நரேந்திர விக்ரமாதித்தன்<br>போசராசன் | கதைகள் மூலமாகத் தமிழ் நாட்டிற்கு அறிமுகமானவர்கள். |
| சேரராசன்<br>சோழராசன்<br>பாண்டியராசன் | தம் நிலையிழந்து மறைந்து விட்டனர் |

| | |
|---|---|
| அன்னதேவராயர்<br>பிரதாபருத்ரராயர்<br>நரசிம்மராயர்<br>கிருஷ்ணராயர்<br>அரகரராயர் | விஜயநகர மன்னர்கள் வழியில் சிலர் |

சுபருடைய ராயர்—ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர் அவருடைய காரியக்காரர்கள்.

1. திருமலை நாயக்கர்
2. வேங்கடபதி நாயக்கர்
3. கிருஷ்ணப்ப நாயக்கர்

இப்பட்டயம் எழுத்துவடிவம் பெற்றது இக்காலத்தில் தான். ஆங்கிலேயர் வருகைக்குச் சற்று முந்திய காலம். சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னதாக இருக்கலாம்.

6. எல்லை பிரித்தல்

மதுக்கரையில் முன்னொரு காலத்தில் சேரர், சோழர், பாண்டியர் ஆக மூவருக்குமான எல்லை பிரித்ததாகப் பல குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் தெளிவான மூலப் பட்டயம், கல்வெட்டு, சுவடி ஏதும் கிடைக்கவில்லை. இந்தச் செய்திக்கும் இப்பட்டயத்தின் பின் வரும் செய்திகளுக்கும் சம்பந்தமில்லை. எல்லை பிரித்தது வேறுகாலம். அந்தப் பழைய செய்தியும் இதிலே கூறப்படுகிறது.

மதுக்கரையில் எல்லை பிரித்ததைப் பற்றிக் "கொங்கு நாட்டு வரலாறு" என்னும் நூலில் 'கோவைக் கிழார்' கோ. ம. இராமச்சந்திரஞ் செட்டியார் பின்வருமாறு கூறுகிறார்.

> "மதிற்கரை கீட்டிசை தெற்குப் பழனி மதிகுடக்குக்
> கதித்துள வெள்ளி மலைபெரும் பாலை கவின் வடக்கு
> விதித்துள நான்கெல்லை சூழ வளமுற்று மேவி விண்ணோர்
> மதித்திட வாழ்வு தழைத்திடு நீள் கொங்குமண்டலமே.

மதிற்கரை என்பது மதுக்கரை என்று இப்போது வழங்கிவருகிறது. இது குளித்தலைக்கு மேற்கே காவேரி ஓரமாக இருக்கும் ஓரிடம். இவ்விடத்தில் செல்லாண்டியம்மன் கோயில் என்ற ஒருகோயில் உண்டு. இதைப்பற்றி ஒரு கர்ண பரம்பரைக் கதை வழங்கி வருகின்றது. சேர, சோழ, பாண்டியர்களான மூவேந்தர்களும் தங்களுடைய நாட்டு எல்லையைப் பற்றி வாதஞ் செய்து கொண்டிருக்கையில் அம்மூவரும் மதுக்கரை செல்லாண்டியம்மன் கோயிலுக்கு அருகில் போராடினார்களாம். அப்போது கொங்கு வேளாளரில் சிறந்த கவுண்டர் ஒருவர் அம்மூவேந்தர்களுக்கும் மத்தியஸ்தம் செய்து

செல்லாண்டியம்மன் கோயிலையே அவரவருடைய நாடுகளுக்கு எல்லையாகக் கொள்ளும்படி சொல்லவே அம்மூவேந்தர்களும் ஒத்துக் கொண்டு மிகவும் மகிழ்வுற்று அக்கவுண்டருக்குக் கொங்கு மண்டலத்து 24 நாடுகளுக்கும் தலைமைப்பட்டம் கட்டிவிட்டுச் சென்றார்களாம். அந்த ஒப்பந்தத்தின்படி செல்லாண்டியம்மன் கோயிலுக்கு மேற்கே சேரநாடு என்றும் கிழக்கே சோழநாடு என்றும், தெற்கே பாண்டிய நாடென்றும் கணிக்கப்பட்டதாம் அக்கோயில் மூவேந்தர்க்கும் பொதுவாம். இவ்வாறு வழங்கும் கர்ணபரம்பரைக் கதையினால் சேரநாட்டு எல்லை மதுக்கரை வரையில் சென்றது எனக் கொள்ளவேண்டும். இதில் கொங்கு நாட்டைச் சேர நாட்டுடன் கலந்து வைத்திருப்பதைக் கவனிக்கலாம். ஆகவே இக்கதை பிற்காலத்திய கதையாக இருக்கவேண்டும். இதைப்பற்றிப் பின்னால் விவரமாக ஆராய்வோம்.''

எனவே எல்லை பிரித்த செய்தி மதுக்கரையின் சிறப்பைக் கூற வந்த பழைய நிகழ்ச்சி எனக் கொள்ளல் வேண்டும்.

7. மாநாடு

இனிமேல் தான் பட்டயத்துச் செய்திகள் தொடங்குகின்றன. மாநாடு கூடுகின்றது. மாநாட்டில் கலந்து கொண்ட கவுண்டர்களின் பெயரும் நாடும் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களுடன், 'கட்டுக் கணி' என்றழைக்கப்படும் பல்வேறு தொழிலாளர்கள் கூடியுள்ளனர். இவர்கள் அனைவருடனும் ஒப்பந்தம் செய்துகொள்ளும் வேட்கோவர் திரண்டுள்ளனர். இவர்களின் பெயர்கள் சொல்லப்படவில்லை. கலந்து கொண்ட கவுண்டர்களின் பெயர்களும், அவர்களது நாடும் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | தென்கரை நாடு | —வேணுவுடையாக் கவுண்டர் |
| 2. | காங்கய நாடு | —காங்கய மன்றாடியார் |
| | | —பல்லவராயக் கவுண்டர் |
| | | —சர்க்கரைக் கவுண்டர் |
| 3. | பூந்துறை நாடு | —வாரணவாசிக் கவுண்டர் |
| 4. | அரைய நாடு | —தீர்த்தாக் கவுண்டர் |
| 5. | மணல் நாடு | —காளியப்ப கவுண்டர் |
| 6. | வேங்கலநாடு | —காளத்தியப்ப கவுண்டர் |
| | | —நீலியப்ப கவுண்டர் |
| 7. | தட்டையநாடு | —இராசியண கவுண்டர் |
| 8. | கிழங்கு நாடு | —செம்பாக் கவுண்டர் |
| 9. | தலைய நாடு | —பெரியாக் கவுண்டர் |
| | | —வல்லையக் கவுண்டர் |

10. அண்டநாடு —பெரிய தம்பி கவுண்டர்
11. வைகாவூர் நாடு —மங்கலக் கவுண்டர்
—பழனிக் கவுண்டர்
12. நல்லூரக்க நாடு —மலையாண்டி கவுண்டர்
13. ஆனைமலைநாடு —காளிங்கராய கவுண்டர்
கோப்பணக் கவுண்டர்
14. பொன்கொழிக்கும் நாடு —தெய்வசிகாமணிக் கவுண்டர்
15. நரையனூர் நாடு —நஞ்சைய கவுண்டர்
16. வாரக்க நாடு —பொன்னப்ப கவுண்டர்
17. ஒடுவங்கனுடு —வேலுமணிக் கவுண்டர்
18. காஞ்சிக் கோயில் நாடு —காசிக் கவுண்டர்
19. பருத்திப் பள்ளி நாடு —பழனிமலைக் கவுண்டர்
20. குருப்ப நாடு —இராசியண கவுண்டர்
21. பூவாணிய நாடு —குமரவேலுக் கவுண்டர்
22. இராசிபுர நாடு —நல்லதம்பிக் கவுண்டர்
23. வடகரை நாடு —சின்னதம்பிக் கவுண்டர்
24. வாளவந்திநாடு —செம்பாக் கவுண்டர்.

ஆக 24 நாட்டின் சார்பாக 30 பேர் கலந்து கொண்டனர்.

இவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்ட தொழிலாளர்களின் பெயர்கள் ஏதும் காணப்படவில்லை.

8. கட்டுக் கனி

ஒரு பண்ணையக்காரரும் அவருக்குத் தொழில் செய்யும் வண்ணான், நாவிதன், குயவன், போன்ற தொழிலாளிகளும் சேர்ந்த குழு கட்டுக்கனி என்றழைக்கப்படுவது (கட்டுக்கல் என்று சுவடியில் காணப்படுவது பிழை வடிவம்).

9. வேட்கோவர்

எல்லா வசதிகளும்படைத்த கவுண்டர்களுக்குப் புதுப்புது வகையான பாத்திரங்களை (நவபாண்டம்) பயன்படுத்த வேண்டுமென்ற ஆர்வம் பிறக்கின்றது.

அதனால் நாட்டுக் கொருத்தர் விதம் 24 பேர் பாண்டிய நாடு சென்று வேட்கோவர்களை அழைத்து வருகின்றனர்.

சுவடியில் 'பாண்டிய நாடு' என்றுள்ள போதிலும் சோழ நாடு சென்று அழைத்து வந்ததாகவே செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. சோழன் பூர்வபட்டயம் என்ற நூல் சோழ நாட்டிலிருந்து வேளாளர்களை அழைத்து வந்து, காடுதிருத்தி நாடாக்கி ஊர்கள் அமைத்த விபரம் கூறுகிறது. அதற்குச் சற்றே பிந்திய காலத்தில்

இந்தப்படி சோழநாடு சென்று வேட்கோவரை அழைத்து வந்திருக்கலாம். சோழநாட்டிற்கும் கொங்கு நாட்டிற்கும் நடுவில், மதுக்கரை உள்ளது இங்குக் குறிப்பிடத் தக்கது.

## 10. திருநீலகண்டர்

அழைத்து வந்து வேட்கோவருக்குக் 'கொங்கத் திருநீலகண்டர்' என்று பெயர் தருகின்றனர்.

> தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
> திருநீலகண்டத்துக் குயவனார்க்கும் அடியேன்

என்று திருத் தொண்டத் தொகையில் முதலாவதாகக் குறிப்பிடப் படும் அடியார் திருநீலகண்டர் ஆவர். இவர் வேட்கோவர் குடியில் பிறந்தவர். மிகுந்த சிவபக்தர் எப்போதும் 'திருநீலகண்டம்' என்று கூறிவரும் பழக்கமுடையவர் அதனால் அவரது இயற்பெயரை விடத் திருநீலகண்டர் என்ற பெயரே நிலைத்து விட்டது.

இளமைக் காலத்தில் தாசி ஒருத்தியை நாடிச் சென்று திரும்பி வந்த காலை, அவரது மனைவி "இனி எம்மைத் தொடாதீர்" என்று பன்மையில் கூறியதால் பின்னர் மனையாளையும் பிற பெண்டிரையும் நினையாமலேயே முதுமை யெய்தினர்.

இவரின் பெருமையை உலகுக் குணர்த்த சிவபெருமான், இர வலர் வேடம் பூண்டு, தன் திருவோட்டைத் திருநீலகண்டரிடம் கொடுத்து வைத்துப் பின் தானே மறைத்து விளையாடினாராம். ஓடு மறைந்ததை அறியார் நீலகண்டர். ஓட்டைத் தான் தொலைக்க வில்லை யெனில் மனையாளின் கரம் பிடித்து ஆரூர்க் குளத்தில் மூழ்கி சத்தியம் செய்துதரக் கேட்கிறார். இரவலர் வேடதாரியான சிவனார். யான் செய்த சத்தியத்தின்படி, அப்போது மனைவியைத் தொட முடியாத நிலையை உலகிற்குச் சொல்ல வேண்டியதாயிற்று. இவரது சத்தியத்தின் மாட்சியை உலகம் அறிந்துகொண்டது.

இருவரும் ஒரு கோலின் இருமுனைகளையும் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி எழத் தம் முதுமை நீங்கி இளமை பெற்றதாக பெரிய புராணத்தில் சேக்கிழார் கூறுகின்றார்.

வேட்கோவர் தம் குல முதல்வனான திருநீலகண்டரைப் போற்றிப் பாராட்டுவர். ஆண்டுதோறும் அவர் பிறந்த ஓரையில் குருபூசை இக்காலத்தும் கொண்டாடுவர். அதனாலேயே 'கொங்கத் திருநீலகண்டர்' என்று பெயர் சூட்டப்பட்டனர்.

## 11 உரிமைகள்

நாடு விட்டு நாடுவரும் வேட்கோவர், தம் சுற்றத்தை விட்டு நீங்கி வருவதால் பாதுகாப்பு கோருகின்றனர்.

அதற்காகப் பல உரிமைகள் வழங்கப்படுகின்றனர்.

1. நாட்டுக்கொருவரே இருப்பராதலால்: கவுண்டர்கள் தம் மோடு சமமாகப் பாவித்து, "கொள்வினக்குடம் ஒன்று உண்பதுவும், தின்பதுவும் சமம், திருமண உறவு மட்டும் இல்லை" என்று உறுதி யளிக்கின்றனர்.

இன்றும் நாட்டுப் புறத்தில் கவுண்டர்களும், வேட்கோவர்களும் அண்ணன், தம்பி, மாமன், மச்சான் என்று உறவுப் பெயர் சொல்லி அழைப்பதைக் காணலாம்.

2. கவுண்டர்கள் தமது திருமணத்தின்போது செய்யப்படும் சடங்குகளில் பாதியை வேட்கோவரும் செய்துகொள்ள அனுமதிக் கின்றனர். அவை ஆறு:-

1. குப்பாரி கொட்டி வருதல்
2. மெட்டி அணிதல்
3. நாட்டுக் கல்லுக்கு பெண் அழைத்துப் போய் வருதல்
4. மாப்பிள்ளை குதிரை ஏறுதல்
5. பெருந்தாலி கட்டுதல்
6. காவிளங்குதல்

3. இவ்வாறுவகைச் சீர்தவிர வேட்கோவர் தமக்கென உள்ள எல்லாச் சீர்களையும் செய்துகொள்ளலாம்.

## 12. பிழைப்புக்கான வழி

கூலி ஒருவருக்கு நாலுவள்ளம் (நெல்) அளிக்கப்படும். களத் திலே நெல்லுக்கட்டு ஒன்று அளிக்கப்படும்.

ஒவ்வொரு நோன்புக்கும் வீட்டுக்கு இரண்டுபடி நெல் அளிக்கப் படும்.

பின் கண்ட கோயில்களில் பூசை செய்யும் உரிமை வழங்கப்படு கிறது.

1. அய்யனார் கோயில்
2. கன்னிமார் கோயில்
3. மன்னத்துப் பொங்கல்

4. பட்டத்தலச்சி
5. முத்தாலம்மன்
6. கிராமசாந்தி செய்தல்

13. குடியேற்றம்

கவுண்டர்கள் 24 நாட்டுக்கும் 24 குடும்பங்களை அழைத்து வந்து நாட்டுக்கொரு குடும்பமாகக் குடிவைத்ததாக இப்பட்டயம் கூறுகிறது.

ஆனால் உண்மையில் 32 குடும்பங்கள் வந்தனவாகத் தெரிகிறது. 24 நாட்டிற்கும் 24 குடும்பம் போக எஞ்சிய எட்டுக்குடிகளும் எட்டு பெரிய ஊர்களில் குடியமர்த்தப்பட்டதாகவும் தெரிகிறது. கொங்கு வேட்கோவர் இன்றும் தம் நாட்டுக் கூட்ட அழைப்பிதழ்களில் இந்த விவரத்தைச் சேர்த்துக் கொள்கின்றனர். "நாடூர் உறவின் முறை யார் வருக" என அழைப்பர்.

ஒவ்வொரு நாட்டுக் குயவர் குடியும் பல்கிப் பெருகி இன்று ஆல் போல் தழைத்து விளங்கியுள்ளது.

14. நவபாண்டம்

கொங்கு நாட்டில் திருமணம், மற்றும் விசேடங்களுக்கு மட் பாண்டங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. ஒவ்வொரு குடியினரின் திருமணத்திற்கு இன்னின்ன பாத்திரங்கள் இத்தனை தரவேண்டும் என்றும், அவற்றுக்கு மாற்றாகத் தரவேண்டிய பொருட்கள் என்ன னென்ன வென்றும் பட்டியல் தரப்பட்டுள்ளன. அவற்றை விரிவா கவும், தெளிவாகவும், பட்டயத்தின் மூலத்தைப் படித்தே தெரிந்து கொள்ளலாம்.

15. கோரிப் பெறுதல்

திருமணம் நிச்சயமானதும் வேட்கோவரை அழைத்து வெற்றிலை பாக்கு வைத்து திருமணச் செய்தி சொல்ல வேண்டும். திருமணத்தன்று பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி ஏனங்களை சுண் ணாம்பு பூசி, செம்மண் கரை கட்டி எடுத்துச்சென்று திருமண வாசலில் வைப்பர். அங்கு அளிக்கப்படும் அரிசி, பருப்பு, கருப்பட்டி, நெய் பணம் முதலிய முன்னால் வைத்து, நீர்அளாவிய பின்னரே திருமண வீட்டார் ஏனங்களை எடுத்து வைப்பர்.

16. சாதிகள்

ஒவ்வொரு சாதிக்கும் வழங்கப்படவேண்டிய ஏனங்களின்பட்டி யலும், அதற்கான சீர் வரிசைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. வேளா

ளர்களுக்கு 1 பணம் முதல் 5 பணம் வரை சீரும் அதற்கேற்ப பண்டங்களும் கூறப்படுகின்றன.

பலபட்டறைச் சாதி என்பது கவுண்டர்களுக்கும் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் இடைப்பட்ட பல சாதி மக்களைக் குறிக்கும்

தவிர கம்மார வடுக நாயக்கர், சூரியகுல வம்சம், விஸ்வகுலத்து ஆசாரிகள், சோழிய வேளாளர், பாண்டிய வேளாளர், இராசாக்கள், வடுக ஆசாரிகள், முதலிய சாதியினரின் திருமணத்திற்குத் தர வேண்டிய ஏனங்களின் பட்டியலும், அதற்கிணையான சீர்வரிசை களும் கொடுக்கப்பட்டுள்ளன.

கம்மார வடுக நாயக்கர், தொட்டிய நாயக்கர் என்றும் அழைக் கப்படுவர். முத்தாலம்மனை வணங்குவர். முத்தாலம்மன் விழா வின்போது பச்சை மண்ணில் விக்ரகம் செய்து, சுடாமல் சாயம் பூசி வைக்கப்படும். விழா முடிந்ததும் ஆற்றில் அல்லது கிணற்றில் முத்தாலம்மன் சாமியை இறக்கி விடுவர் பூசை உரிமை வேட்கோவ ருக்கு விடப்பட்ட செய்தி முன்னமே கூறப்பட்டுள்ளது.

விஸ்வகுலத்து ஆசாரிகள், வடுக ஆசாரிகள் என இரண்டு வகையினர் கூறப்பட்டுள்ளனர். பொன்வேலை செய்வோர், தச்சு வேலை செய்வோர் விஸ்வகர்மிகளாவர். சூரியகுல வம்சம் என்பதும் இராசாக்கள் என்பதும் எந்தச் சாதி என்று தெரியவில்லை.

இன்னொரு குறிப்பு கவனிக்கத்தக்கது. கவுண்டர்கள் வீட்டுத் திருமணத்திற்கு மட்டும்தான் வேட்கோவர் ஏனங்களை எடுத்துக் கொண்டுபோய் திருமணப் பந்தலில் வைத்துவிட்டு, சீர்வரிசை களைப் பெற்று வருவார். மீதி எல்லாச் சாதியினரும் சீர்வரிசைகளை வேட்கோவரின் வீட்டில் கொண்டுவந்து கொடுத்து விட்டுத் தாமே ஏனங்களை எடுத்துச்செல்லவேண்டும். சிலர் மேளதாளத்துடன் எடுத்துச்செல்வர்.

கலியாணப் பானைகளை அடுக்கிவைத்து, அவற்றின் முன்னால் சீர்வரிசைகளை வைத்து நீர் அளாவி, கற்பூரம் ஏற்றிவைத்துப் பூசை செய்த பின்னரே எடுத்துச் செல்வது வழக்கம்.

பாதம், பானை, அதன்மேல் ஒரு சின்னக் கரகம், அதன்மேல் பூ கொண்டது மடைக்கலப்பானை ஆகும். அவை வெள்ளை அடிக் கப்பட்டு அதில் சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய வண்ணங்களில் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதனாலேயே எழுத்துப் பானை எனப் பட்டது.

பலபட்டறைச் சாதியினருக்கு ஆனை அரசாணிப் பானை என்று சொல்லப்பட்டுள்ளது. வழக்கமான பானைகளுடன், யானை உருவம்

ஒன்று செய்து வண்ணம் பூசி அளிக்கப்படும். மணவறையில் அந்த யானையின் தலையில் அகல் விளக்கு ஏற்றி வைக்கப்படும்.

மற்ற சாதியினருக்கு, அவர்கள் எந்த வகையில் கேட்கிறார்களோ அந்த வகையில் செய்துதர அனுமதி வழங்கப்படுகிறது.

பிராமணர் வீடு பற்றி இந்தப் பட்டயத்தில் ஒன்றும் கூறப்படவில்லை. அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியும் ஒன்றும் கூறப்படவில்லை. பிராமணர்கள் திருமணத்திற்கெனப் பானைகள் எதுவும் பெறுவதில்லை. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள வேட்கோவர் வீட்டிற்கு மேளதாளத்துடன் வந்து பானைகள் எடுத்துக் கொண்டு ஊர்வலமாகச் செல்வது இன்றும் நடந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக அவர்களே வாசிக்கும் கிளாரினெட் பக்க வாத்தியங்களுடன் அமர்க்களமாக இருக்கும்.

## 17. உருவாரம்

கால்நடைகளுக்கோ மனிதர்களுக்கோ நலக்கம் (நோய் நொடி) ஏற்படும்போது சாமியை வேண்டிக் கொள்வர். குணமானதும் உருவாரமோ பொம்மைகளோ செய்து வைப்பர்.

உருவாரம் செய்தபின் ஒரு படிநெல், ஒரு வட்டுக் கருப்பட்டி, பாக்கு வெற்றிலை பழம் முதலியன வைத்து பூசை செய்த பின் கோயிலில் கொண்டுபோய் வைக்க வேண்டும். உருவாரங்கள் சிறிய அளவிலானவை.

பெரிய பண்ணைகளில் குதிரை செய்தளிக்க வேண்டிக் கொள்வர். அதைச் சொல்லும்போது, பாக்கு வெற்றிலையில் பணத்துடனும், ஒரு பிடி மண்ணுடனும் சொல்லுவார்கள். குதிரைகள் பெரிய அளவில் சுமார் 10 முதல் 15 அடிவரை உயரமாக இருக்கும். கம்புக் கதிரில் கம்பு நீக்கப்பட்ட பொம்மையை மண்ணோடு கலந்து பிசைந்து குதிரைகள் செய்வர். உடல் தனியாகவும் தலை தனியாகவும் செய்து, காய்ந்தபின் சுடுவர். சுடுவதற்கு முன்னாள் ஆட்டுக்கிடாய் ஒன்று வெட்டி, பொங்கல் வைத்துப் பூசை செய்வார் வேட்கோவர். அந்தப் பூசைக்காக 5 வள்ள நெல்லும், ஒரு ஆட்டுக்கிடாயும், தேங்காய் பழமும் கொடுக்க வேண்டும். பின் உடலையும், தலையையும் இணைத்து கயிறால் கட்டி அதன் மீது சுண்ணாம்புக் காரை பூசுவர். குதிரை முழுவதும் வெள்ளை அடித்து, வண்ணங்கள் பூசுவர். கண்ணுக்குக் கருவிழி மட்டும் தீட்டாமல் நிறுத்தி வைப்பர். வர்ணச் செலவுக்காக ஒரு பணம், ஒரு வள்ளம் பசும்பால், ஒரு வள்ளம் சுண்ணாம்புக்கல், (சுண்ணாம் சால் என்று ஓலையில் உள்ளது பிழையான வடிவம்) கொடுக்க வேண்டும்.

கண்திறப்பு இறுதிப்பூசையாகும். அப்போது குதிரையின் முன்னால் ஒரு வள்ளம் நெல்லு, ஒரு அச்சு கருப்பட்டி, பாக்கு வெற்றிலை அதில் 2 பணம் வைக்கப்படும். தூவக்காலில் போட சாம்பிராணியும் தரவேண்டும் ஒரு ஆட்டுக்கிடாயும் தரவேண்டும். பூசை செய்வதற்கு முன்னால் கண்ணுக்கு கருவிழி தீட்டுவர். பின்னர் கிடாயை வெட்டி பூசை செய்வர்.

பூசை முடிந்ததும், இரண்டு பக்கமும் தண்டு கட்டி, குதிரையைத் தூக்கிக் கொண்டு போய் கோயிலில் வைத்து விடுவார்கள்.

குதிரை மட்டுமல்லாமல் பெரிய அளவில் காளை, பசு, ஆடு முதலியனவும் செய்து வைப்பதுண்டு.

'கனியாட்டக் குதிரை' என்று பட்டயத்தில் கூறப்பட்டுள்ளது என்னவென்று தெரியவில்லை.

18. கள்முட்டி

மூப்பர்கள் எனப்படும் சாணார் கள் இறக்குவதற்காக பானைகள் வழங்கும் விதம்.

ஒரு பணத்துக்கு 60 முட்டியும், ஒரு பணத்துக்கு 10 இரட்டைத்தாளி, 8 மிடா முதலியன. மூப்பர்கள் பணமாகக் கொடுக்கலாம். அல்லது பண்டமாற்றாக "ஒரு பணத்துக்கு ஒரு மிடா கருப்பட்டி, ஒரு கோட்டை நொங்கு, ஒரு கூடை சேவாய்" தரலாம், பனை ஓலையில் கூம்பு வடிவில் பிடித்து அதில் நொங்கு வைத்துக் கட்டுவர். இது கோட்டை எனப்படும். பனம் பழத்தைத் துண்டு துண்டாகச் சீவிக் காய வைப்பர். இது சேவாய் எனப்படும்.

19. கெட்டி வீடு

வேட்கோவர் கெட்டி வீடு கட்டுவதாக இருந்தால், ஒவ்வொரு பண்ணையத்தாரும், ஒரு பனையில் உள்ள ஓலைகளையும் சிறைகளையும் தரவேண்டும். அத்தோடு கன்றோடு ஒரு பசு, அஞ்சு பணம், 10 வள்ளம் அரிசி, 5 வள்ளம் பருப்பு, ஒரு தூக்கு கருப்பட்டி $2\frac{1}{2}$ படி நெய் முதலியன தருவார்கள்.

20. குழாய்

ஓட்டுவில்லை வீடுகளுக்குக் குழாய் ஓடுகள் வனைந்து கொடுக்க வேண்டும். ஒரு குழாயை இரண்டாக அறுத்தால் இரண்டு ஓடுகள் ஆகும். அதன் விலை குடியானவர்களுக்கு ஆயிரம் ஓடு

களுக்கு ஆறுபணம். கோயிலுக்காக இருந்தால் ஆயிரம் ஒடு களுக்கு ஐந்து பணம்தான் கிடைக்கும்.

இங்கு 'அறமனை' என்ற சொல்லுக்கு கோயில் என்று பொருள் கொள்ளலாம். திருவிழாக் காலங்களில் தனியார் எத்தனை குதிரை செய்துவைத்தாலும் கோயில் சார்பில் ஒரு குதிரை செய்து வைக்கப்படும். அந்தக் குதிரை 'அறமனைக் குதிரை' எனப்படும். 'அரண்மனை' என்பதன் திரிபாக இருக்கலாம். எனவேதான் "அறமனைக்கு ஆயிரம் பில்லைக்கு 5 பணம்" என்ற சொற்றொடருக்குக் "கோயிலுக்கு" எனப் பொருள் கொண்டோம்,

## 21. கிராம சாந்தி

கோயில் கிராம சாந்தி செய்யும் உரிமை வேட்கோவருக்கு அளிக்கப்பட்டது. அதற்கான காணிக்கை ஒரு பணம் மற்றும் ஒரு வஸ்திரம், அஞ்சு வல்லம் நெல், ஒரு ஆட்டுக் கிடாய், ஒரு வராகன் வெற்றிலை பாக்கு சாம்பிராணி முதலியன. இதில் பணம் 1, வராகன் எனக் கூறப்படுகிறது இரண்டுக்குமுள்ள வேறுபாடு தெரியவில்லை. மற்றும் இந்தப் பத்தியில் (பக்கணி) உள்ள கடைசிஇரண்டு வரிக ளின் பொருளும் தெளிவாக இல்லை,

சிவன், பெருமாள் கோயில்களின் திருவிழாக்களில் கிராம சாந்தி செய்தல் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி. இருவாரத் திருவிழா வில் முதல்நாள் இரவு நள்ளிரவில் செய்யப்படுவது. பெரும்பாலும் அது அமாவாசைக்கு அருகில் இருக்கும். கும்மிருட்டு ஆடு அறுத்து அதன் குருதியை வெள்ளைச் சோற்றில் கலந்து எடுத்துச் செல்வர். தேரோடும் வீதியில் எட்டுத் திசையிலும் உள்ள பலிக்கல் மீது மலர் வழிபாடு செய்வர். அவ்வேளையில் மரங்களின் மேல் இருந்து அலறிடும் அலகைகளுக்கு இரத்தச் சோறு எறிவர். இரத்தச் சோற்றை எடுக்கும் முகத்தான் சோறு படைக்கும் ஆளையே மரத்தின் மேல் தூக்கிச் செல்ல முயற்சிசெய்யும் என்பர். அதன் முயற்சியைத் தடுக்க உடன் செல்வோர் அவரைப் பிடித்துக் கொள்வர். ஆக கோழை மனம் கொண்டோர் இதைக் கண்டாலே நடுங்கிக் காய்ச்சல் வந்து அவதியுறுவர். அதனால் அன்று இரவு பொதுமக்கள் யாரும் சாலையில் வரமாட்டார்கள். கதவைத் தாளிட்டு கொண்டு வீட்டிற்குள்ளேயே இருந்து கொள்வர். இவ்வாறாக எட்டுத் திசையிலும் பூசை செய்ததும் ஊர் புனித மடைந்ததாகக் கருதப்படும்.

'சோழன் பூர்வ பட்டயம்" என்ற நூலிலும் கிராம சாந்தி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. காடு திருத்தி நாடாக்கி, புதிய கோயில்கள்

அமைத்தபோது, கொங்கு நாட்டில் ஆங்காங்கு வாழ்ந்து வந்த பூர்வ குடிகளின் காவல்தெய்வங்கள் இடையூறு செய்தனவாம். அவற்றை அமைதிப்படுத்தவே 'இரத்தச் சோறு' படைத்துக் கிராமசாந்தி செய்யப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

கோயில்களில் திருவிழா தொடங்குமுன் முதல்பூசை செய்பவர் சங்க காலத்திலும் வேட்கோவராகவே இருந்தார் என நற்றிணை 293 ஆம் பாடலால் அறியலாம்.

மணிக் குரல் நொச்சித் தெரியல் சூடிப்
பலக ளார்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலு மகன்றலை மன்றத்து
விழவுத்தலைக் கொண்ட பழவிறல் மூதூர்.
நொச்சி மாலை சூடிய முதிய குயவர்
அகன்ற கோயில் முற்றத்தில் பலியிட்டு
விழாவினைத் தொடங்கி வைக்கின்றாராம்.

இதே பழக்கம்தான் பின்னர் வளர்ந்து 'கிராமசாந்தி' ஆனதோ வென ஐயுறத்தோன்றுகிறது.

22. முத்தாலம்மன்

முத்தாலம்மன் பற்றியும் ஏற்கனவே சொல்லப்பட்டது, முத்தாலம்மன் சிலை செய்வதற்கு 3 பணம், ஒரு பணத்து விலையில் சித்தாடை, ஒரு சோடி கண்மலர் (வெள்ளி), ஒரு சோடி பொட்டுக் காறை தரவேண்டும். கண்திறப்பதற்காக ஒரு வள்ள நெல், ஒரு அச்சுக் கருப்பட்டி பாக்கு வெற்றிலை, பழம் தேங்காய் முதலி யற்றோடு ஒரு ஆட்டுக்கிடாயும் உண்டு.

23. ஒப்பந்தம்

மேற்கண்டபடி கொங்கு 24 நாட்டுக் கவுண்டர்களுக்கும், புதிதாகக் குடியேறிய கொங்கத் திருநீலகண்டர் எனப்படும் வேட்கோவருக்கும், மதுக்கரைச் செல்லாண்டியம்மன் முன்பாகவும், காவேரியம்மன் முன்பாகவும் ஒப்பந்தம் நிறைவேறுகிறது.

அப்போது சேரமான் பெருமாள், ராயர், 24 நாட்டுக் குடியான வர்கள், செட்டிவர்த்தகர், பலபட்டறைச் சாதியார் அனைவரும் அனைவரும் கூடியிருந்தனர். கல்லும், காவேரியும், புல்லும், பூமியும் சந்திரனும் சூரியனும் உள்ளவரை இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகு மாம்.

## 24. பட்டயத்தின் சிறப்பு

வரலாறு என்பது மன்னர்களின் ஆட்சியாண்டுக் கணக்குகள் மட்டுமல்ல. மக்களின் மனப்போக்கும் பழக்க வழக்கங்களும் காலங்கள் தோறும் எவ்வாறு இருந்தனவென்று காண்டலே யாகும்.

கொங்கு நாட்டில் இன்று புழக்கத்திலிருக்கும் பழக்க வழக்கங்கள் சிலவற்றிற்கு இப்பட்டயம் விளக்கம் அளிக்கின்றது. இருபெரும் சமுதாயத்தினிடையே நிலவிவந்த ஒப்பந்தத்தின் எழுத்து வடிவம் கிடைத்துள்ளது. ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழைகள் பல பெருகி விட்ட போதிலும், மூல வாசகத்தை எளிதில் அனுமானிக்க இயலுகின்றது.

தமிழகத்து வேட்கோவர்களின் பழக்க வழக்கங்களும் மரபுகளும் பெரும்பாலும் ஒன்றாக இருக்க கொங்கு நாட்டவரின் நடைமுறையிலே நிலவி வந்த தனிப்பட்ட மரபுகளுக்கு இப்பட்டயம் விளக்கம் தருகின்றது.

இப்பட்டயத்தின் செய்திகள் நடைமுறையில் மிகவும் பிடிப்புடனிருந்த செய்தி ஒரு நிகழ்ச்சியால் விளங்கும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் கரூர் வட்டாரத்தில் சுக்காலியூருக் கருகில் ஒரு சிற்றூரில் ஒரு வேட்கோவரின் திருமணத்தில், மாப்பிள்ளை குதிரையேறக் கூடாதென்று அவ்வூர் கவுண்டர்கள் தடுத்து விட்டார்கள். உடனே வேட்கோவர் திருமணத்தை நிறுத்திவிட்டு பழைய கோட்டை வந்து பட்டக்காரரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். மதுக்கரைப் பட்டயத்தைப் பற்றிய விவரங்களைப் பட்டக்காரர் எழுதிக் கொடுத்ததுடன் உள்ளூர்க் கவுண்டர்களுக்கு ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினாராம். மீண்டும் உள்ளூர் வந்து அடுத்த நாள் எல்லாச் சடங்குகளுடனும் திருமணத்தை நிறைவேற்றினார்களாம்.

சிறப்பாக நாடு விட்டு, சொந்த பந்தத்தை விட்டு வரும் தொழிலாளிகளுக்கும், தாமே எல்லாம் என்கிறவகையில் "கொள்ளி, கோடி ஒன்று, உண்பதும் தின்பதுவும் ஒன்று, கொள்வதும் குடுப்பதும் பிரதியம்'' என்ற சம உரிமை வழங்கிய நாட்டுக் கவுண்டர்களின் பெருந்தன்மை விளங்குகிறது.

# ஆய்வுகள்

**மதுக்கரைப் பட்டயம் பற்றிய தொடர்பான பணிகள்**

1. மூலச் செப்புப் பட்டயத்தை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.
2. சோழன் பூர்வ பட்டயத்துடன் சேர்த்து வைத்து ஆராய வேண்டும்.
3. நவபாண்டம் வேண்டுமென்பதற்காக 24 நாட்டுக் கவுண்டர்களும் கூடி, பிற நாட்டிலிருந்து வேட்கோவரை அழைத்து வந்தனர் என்றால் அதற்கு முன் கொங்கு நாட்டில் வேட்கோவர் இல்லையா?
4. மதுக்கரைப் பட்டயத்தில் உள்ள 24 நாட்டுப் பெயர்களுக்கும், கொங்கு மண்டல சதக வார்த் தொகைப் பாடலில் வரும் 24 நாட்டுப் பெயர்களுக்கும் உள்ள வேறுபாடுகள் கல்வெட்டில் காணப்படும் நாட்டுப் பெயர்கள்.
5. பணத்தின் மதிப்பு.
6. பல்வேறு வகைப் பாண்டங்களின் படங்களும் அளவுகளும்
7. பட்டயத்தின் காலம், அப்போதைய மன்னர்கள்.
8. மதுக்கரையில் எல்லை பிரித்த வரலாறு.
   அது சேர, சோழ, பாண்டியர் எல்லையா? அல்லது 24 நாட்டு எல்லையா?
9. தொல்லியல் அகழ்வுகளில் கிடைக்கும் மண் ஏனங்களுக்கு இப்பட்டயத்திலுள்ள பெயர் பொருந்துமா எனக் காணவேண்டும்.

(. மக்களிடையே, உயர்வு, தாழ்வு வைப்பு முறையைக் கணிக்கலாம்.

# இருபத்து நான்கு நாட்டுப் பட்டயம்

# யிருவத்தி நாளுநாட்டு பட்டயம்

ஸ்ரீமது சகல குன சம்பன்னருன சகல தர்ம்ம பிர்தி பாலகருன பந்தூசன் சித்ர மனிக்கருன பத வாக்கிய பிருமானிக்கருன அன்னதான விநோதகருன அகண்டிதலச்சிமி அயிசுபரிய சம்பன்னருன மித்துரு ஊம நோறஞ்சிதருன வெகுசென பூசகருன விபூதிருத்திருச்ச மாலிகாபறண்ருன அரிபூசை குரு பூசைமயேசுபற பூசை மறவாத பெரியோர்களான மகாமேருவுக்கு சரிசமானதிரருன சேரன்க்குறுரவேதியருன குலால மாமுனிவரான முப்புரினூலும் தேர்பனுபயுமுள்ளவருன யெக்கிய பவுத்தியருன தொண்டுக்கு தொளில் குடாதவருன ஆவிடயார் சம்மந்தருன வீமனைப்பனி கொண்டவருன கரிக்கால சொழகன் வழத்த பரிபாலகருன அய்யனுர் வறபிறசாதகம் பெத்த பெரிபெயார்களான அர்வத்தி மூவர் சமுகத்தி லிருப்பவருன தில்லையம் பலத்தில் முதுமை போய் யிழமை பெர்த்த பெரியோர்கலான கிர்தாயுகத்தில் கண்ட ருச்சுதனை வென்ரு, கும்பருசேந்திரருன திரிதாயுகத்தில் வச்சிருசூரனை வென்று மன்னுடருசேந்திர்ரான துவாபரியுகத்தில் திருமலயம்காரை வென்ரு ருசார் திருனீலகண்டருன கலியுகத்தில் பட்டி விக்கிர மாதித்தனை வென்ரு சாலிவகருன யிப்படி சகலயுகத்துக்கும் நன்மை பெயர் பெத்த பெரியோர்களான ஸ்ரீ திருனீல கண்ட சுவாமியார் திருவிளத் திஞலும் சிவகாமியம்மனை தெண்டனிட்ட வின்னப்பம்.

யிப்பொதும் வுத்தலூர் பட்டகாறர் ருதாபுரத்துப் பட்டகாறர் யிரோட்டு பட்டகர் மேல்கரை கீழ்கரை கொங்கு யிருவத்திறாலு ருட்டிலுள்ள திருனீல கண்டர் மூன்ரு புலவரும் அனவெரும் சங்தும தீர்த்தமாகிய அபிசெகம் பெத்து விழங்கிய வவ்வானித்தழத் தில் கனகசபையாக வந்து கூடிநார்கள். முன்னெ 24 நாட்டு கவுண்டர்கள் நாடு பிரிச்சி கானிதுடுத்து கைவரைபட்டயம் யெளுதி கொடுத்த பிரகாரம் யோசனை பன்னி யிருவத்தி நாலு நாட்டு பட்டயம் வேதநாயகி அம்மன் சன்னதி முன்பாக யெளுனது.

அப்போ I கலியுக சகாப்தம் (சதஉளஙயடு)க்கி மேல் செல்லா நின்ர ஆனந்த வருசம் வைய்யாசி மாதம் யடு-தேதியில் யெளுதி னது — சிவமயம்.

தென்கரை காடு...

கைதிபூர் மலை — பாலார் கொத்தனூர் வஞ்சிபம் மன் நர்சிக்கவும் அப்பாமேபறர் ரச்சிக்கவும்

### காங்கய நாடு...

காங்கயம் காடையூர் கன்னபுரம் பாப்பினி வீரசோளபுரம் சிவமலை பட்டாலி கீரனூர் வெள்ளை கோவில் தேவத்தானம் வென்முத்தூர் புத்தக்காரை தூரவலூர்

### பூந்துறை நாடு...

சங்ககிரி சக்கறவாலனத்தம் சேக்கடினத்சம் மோடமங்கழம் லத்தி வடி கத்தாரி கள்வாலி அகறம் மொனச்சி மண்டபத்தூர் மனலி தொக்கலை சுன்னப்பூண்டி கோலிக்காள்ளத்தம் பூந்துறை வெள்ளேடு நசையனூர் யெழுமாத்தூர் பிடாரியூர் யேங்கிநூர் பெருர்துறை திண்டமங்சழம் பழமங்கழம் சாத்தனூர் விரனூர் இஞ்சப்பளி யீரோடு பெரெடு சித்தூடு பதூரூர் மூடகுரிச்சிகுலாநேலை கழாப்பாடி காழமங்சழம் பனயம்பளி குழைவிழக்கு சத்தியமங்கழம் சேழுர் அரைச்சலூர் முருகைதுளு தொண்டிசுபறர் றச்சிக்வும் கொங்கலம்மன் றச்சிக்கவும்...

### வடகரை நாடு...

பாழபலை உவ்வானி வேழமலை தெர்ஞ்சிபேட்டை மரதூர் அந்தியூர் சம்பை ஆப்புகூடல் மயிலம்பாடி குப்பாண்ட பாழயம் வேதநாய கியம்மை றச்சிக்கவும்.

### செலம் கீன் கரை பூந்துறை நாட்டு...

சேர்வாமலை செவ்வாய்பேட்டை அய்யோத்தி பட்டணம் ஆணைந்த குலை கஞ்சமலை காருமாமலை பெரியூர் புத்தூர் பூலாவரி நெலயர வாரம்பட்டி மல்லூர் சாவாமலை காவெட்டி ரங்கன் பாழயம் முடுதுறை கருக்கல்வாடி காமலாபுரம் திருமலைகிரி சூரமங்கலம் சொரியமலை வெணம்நதூர் அளவாப்பட்டி சுபருயர் ஆடயாம்பட்டி கையபரை காடத்தூர் வைருசி திருவனி முத்தார். கிளிமுளி நாதர் ரச்சிக்கவும் சாமுண்டியம்மன் ரச்சிக்கவும்

### பூவானி நாடு...

காவேரிபுரம் வொமலூர் சொரைநகர் வேட்டருயர் திருபதி பன்ன யட்டி துலசம்பட்டி அமறகுனி சாம்பள்ளி நங்கபள்ளி மலியகுளம் சோழவாண்டி பூதப்பாடி சலகண்டிசர் ரச்சிக்கவும்....

### வெங்கல நாடு

கரூர் புன்னம் பௌவுத்திரம் ஆத்தூர் குடையூர் நாகனூர்குடைகாளி குரிச்சி சுபதியம்மன் ரச்சிக்கவும்

மணை நாடு—

தென்னிலை நகர் ஆரியூர்பட்டி வேட்டருயன்பாழயம் கூடலூர் ஆம்பிருந்தி குடந்தூர் ஊத்துபட்டி மழயம் பாழயம் துண்டு காளி பாழயம் கிழருதபுரம் குமரேசர் ரச்சிக்கவும்...

தலைய நாடு ..

தலையூர்மலை குகைகந்தமலை...

பரித்திபள்ளி நாடு...

பரித்தி பள்ளிமலை பிள்ளையார் நத்தம் குழம் கொன்ரெகருமனூர் கொன்னையார் வண்டினத்தம் மின்னுபள்ளி மறப்பேரை வழ்ழகுளி வேலடினத்தம் யிருகாலூர் யிரனுபுரம் செம்பகமாதெவி நடுவ நெரி கூத்தாடி நத்தம் பழமொடு கண்ட கலமாளிகம் பொன்னுனதி வானீசர் சோலீசர் ரச்சிக்கவும்...

வாழ வந்தி நாடு

வழவந்தி கூடச்சேரி பில்லூர் கீரப்பூர் மனப்பள்ளி பாலம்பிருந்தகம் நறவலூர் கோதூர் முகவனூர் குமரீசர் பாதம் ஆரியூர் தோலூர் சாதப்பூர் பிலைகளத்தூர் கோனூர் வள்ளிபுரம் திண்டமங்கலம் நாமக்கல் நடந்தை மேல் சாதப்பூர் ஆரியூர் நகறம் நாமக்கல் நறசிங்க பெருமான் றச்சிக்கவும்...

ருசீபுர நாடு...

அலவாலை ருசீபுரம் சிங்கலாந்தபுரம் வடுகம் புதுபட்டி கள்குரிச்சி சீருபள்ளி பட்டினம் வொடுவம் குரிச்சி காக்காவரி பாச்சல் பிழ்மானூர் குருசுவாமிபாழயம் அத்தனூர் கைலாச நாதர் ரச்சிக்கவும் அத்தனூர்ருய் றச்சிக்கவும்=யேலூர்=புதூர் கனியாநி நமனி கஞ்ச நாட்டா மங்கலம் காதபலி கார் குரிச்சி அல்லாலபுரம் நத்தம் துத்திகுலம் சேந்தமங்கலம் மனவெ மானத்திவுப்புடகம் முசரி கலங் கானி உடுப்பம் தாலம்பாடி ஆனியார் வேல்குரிச்சிவேங்கல வெனரு வேட்டமடி லைனு மலை வறதர் ரச்சிக்கவும் பலையம்மான் ச்சிக்கவும்...

மேல்கரை அரய நாடு...

வொடுமுடி தலயநல்லூர் வேங்கும்பூர் வுஞ்சிலை அஞ்சியூர் கொல்லு கோவில் கொந்தலம் யெளிருற்று வாசநல்லூர் வள்ளிபுரம் துங்கா

துக்காச்சி மொஞ்சனூர் ஊச்சலூர் சிவகிரி வேலாயுத கடவுள் ரச்சிக்கவும் = யிடையார் வெங்கரை பெரும் குரிச்சி திடுமலபூண்டி செலூர் மருதூர் சிருபளி கொத்தமங்கலம் பண்ட மங்கலம் வடகரை ஆத்தூர் ஆனங்கூர் மாவிரெட்டி பொத்தலூர் முகிதாலே கொலாயிருக்கூர் கொத்தலம் சொலசிருமனி யெலம்பிலே மாதெவி கவலே குரிச்சி பறமதி மானிக்கன்த்தம் சொரிக்கிலே கலமங்காநி அல்லாலபுரம் பெங்காளியம்மன் வேலர் ரச்சிக்கவும்.

### கிழங்கு நாடு ..

வெட்டமங்கலம் வுலுந்தொடைமன மங்கலம் வங்கல நன்னியூர் மூலி மங்கலம் புகலியூர் கடம்பை செலேப்பாடி காவெரி கண்டியம்மன் ரச்சிக்கவும்....

### தட்டய நாடு...

உப்புடமங்கலம் வெள்ளியலே புளியூர் கட்டலே வநவாசி புது கொட்டை கிஷ்ஞவறம் திருமகூடல் ஆம்பிறந்தி கொயம்பனி சாம நாயகன் யெலே ··· முச்சிலியம்மன் ரச்சிக்கவும்...

### வாரக்க நாடு...

குசபளி மங்கலம் நாரநாபுரம் பள்ளிடம் செனஞ்செரிமந்தரகிகி பொறமவல கொமரேசர் ரச்சிக்கவும்...

### அண்ட நாடு...

விருபாச்சி பொறநிவாடி யிடய கோட்டை மண்டவாடி குச்வ பட்டி நின்மநீசர் ரச்சிக்கவும்.

### நல்லூருக்க நாட்டை சேர்ந்த ஆணைமலே நாடு...

குடந்தூர் கெருங்கயம் குருலயம் பாலார் சித்தார் கண்டஊார் அமநெகுபரர் ரச்சிக்கவும்.

### காவடிக்க நாடு...

சிங்கல நல்லூர் றைற்றுகுளி தெவம்பாடிருமா பட்டநம் கரைப் பாடி அளியார் திருமத்துரை பாவல பயனூர் அத்தனூர் அம்மன் ரச்சிக்கவும்...

பொங்கலூர நாடு...

பொங்கலூர் புதூர் சசலகானூர் வீரவாண்டி காட்டூர் மாதப்பூர் நங்சம்பாடி பல்லா கோவில் மொகவலை சருகனூர்ந்து சேத்நபேளி மாரனூர் பெரியபட்டி கண்டியன் கோவில் புத்தூர் மெட்டருத்தி சொமனூத்து அபங்கயம்மன கடவுலகொங்கூர் கடத்தூர் 'அலகுமலை வேலாயுதசுவாமி ரச்சிக்கவும்...

ஆருநாடு...

சேலூரு அன்னியூர் வென்னர் திமுடு துரை துடியலூர் பேரூர் அரசூர் தெக்குலூர் கறவன் அவராசிகானூர் நலுலூர யகலைனூர் ஓலைப்பா பூண்டி துரவலூர் ராமபியூர் யெல்த்தூர் யிருகாலூரநாகம பாழயம் தோடமபுத்தூர் கூடலூர் சிங்கன நல்லூரகுன்னன் துரை வாழ வண்ட கொட்டை

குறுப்ப நாடு...

குறுமந்தூர் கலிங்கயம் மயிலூர் குளப்பலூ சீவ்லூர் கொச்சன் மிதனத்தூர் ஆதியூர் திங்கலூர், செவியூர் ஊற்று குனி விசய மங்கலம் விசயாபுரி யம்மன் றச்சிக்கவும்.

...காஞ்சி வொரு வங்கநாடு...

சத்தியமங்கலம் பெருதலூர் தடுப்பளி அனுகுளிகொடு வெளி கூவலூர் தவழமலை கொம்ரிசர் ரச்சிக்கவும் ......காஞ்சி கோவில் நாடு சின்ன பிலியூர் கவந்தபாடி சிதெவியம்மன் ரச்சிக்கவும்... யெட்டூர் விபறம்=கோயமுத்தூர் பெறூர் அரசாம் பலம் காஞ்சித்தி தொடம்புத்தூர் சிங்கன நல்லூர் சங்கனூர் வடவலியூர் கொனி கம்மன் ரச்சிக்கவும்.

யிது ஆரு நாட்டுக்கு சேந்தது = வார்க்க நாட்டை சேந்த குயிலை பீடம் பளி வட வளியூர் சூலூர் ஒட்டகர் மண்டபம் பொன்னகாளிகாரச்சேரி=பூலைவாடி = கன்னுடிபுத்தூர் பூகுபாடி மாதேவி சீலநாயக்கனூர் பழயூர் மலையிது போங்கலூர் நாட்டுக்குட் சேந்தது=மொரூர் தகடபாடுரங்கசமுத்திரம் தட்டாம் குட்டை வேங்கி கவுண்டன் பாழயம் தாச நாயக்கன் பட்டி கட்டாம் பாழயம் ஆத்தூரும் பாழயம் காரியப்பன் பட்டிக்கும் திருவாண்டிபட்டி யோக்கிலியபட்டி குட்டி மேனக்கன பட்டி குமாரபாலையம் காவெரி நதி திருசம்கொடு கொமற மங்கலம் கல்லுபாலையம் சித்திலந்தூர் புளியம்பட்டி மண்டக பாலையம் நெக் காரபட்டி கொறைட் கானிபூந்துரை நாட்டில் அர்த்த நாரிசரர் ரச்சிக் கவும்=குண்டிடம் துடியனூர் பிருட்டிம நவ கொம்பு பிலிக்கான்பட்டி நல்லூர் வடுக நாத சுவாமி ரச்சிக்கவும்.

புங்கனிக்க நாட்டுக்குசேந்தது கொண்ட கானி=சாமகுலம் மச கவுண்டன் சிமையெலே அரகூர் நீலம் பூரகாழபட்டி சவானம பட்டி வெலிச்சி விரபாண்டி கெம்ப நாயக்கன் பாழயம் கோயல் பாழபம் காடம்பட்டி தணைத்தா கவயகானியம்மன் ரச்சிக்கவும்= அன்னியூர் வடக்கலு காரம் டை வெழாதி வண்டி கோட்டை கரியப்புன் படடி பொன் முடி வெட்டபாழயம் சிருமுகை அல்லி துரை கொப்பநேரி மன்னிசர் ரச்சிக்கவும் பெரியம்மன் ரச்சிக்கவும்=வெல்லாரு மெச்செரி அமறம் வெம்ப நெரி தாருபுரம் சமுத்திரம் சமுத்திரம் பக்க நாடுயிருப்பாளி சித்துர் ஆட்யூர் பொட்டநேரி காவிபட்டி மல்லிகெச் பத்தறகாளி ரச்சிக்கவும்.

வெலாரு புவ்வானி நாட்டுக்குச் சேந்த கொண்டகானி...

யிந்தபட்டயம்= 24 நாட்டு சென்மம். புலவனிடத்தில் ஒப்பி வைத்து யிருப்பது அரியவும் யிதுக்கு யாதாமொருவன் வின்வி காதம் பன்னிநால் நிந்திலே பன்னினாலும் கெங்கை கோதாபரியில் சிந்து நதியிலும் சகும் தீர்த்தமாகிய இந்த வவானி புனியதலத்தில் யெனுகாரும் பசுவை கௌர தோஷ்தி போக்கட்டுவனுகவும் சங்கு மெசுபர் வெத நாயகியம்மன் ரச்சிக்கவும். =

24 நாட்டு உரைமுரையார் பேர் = தேங்கரை நாட்டு வேட்டயன்னன் காங்கய நாட்டு அந்தனூரி பூந்தரை நாட்டு காளியன்னன் வடகரை நாட்டு செங்கொடன் சேலம் பூந்துரை நாட்டு அரைச்சாலே புவ்வானி நாட்டு பூதபாடி வெங்கல நாட்டு நல்லன்னன் மநநாட்டு நல்ல காழி தலய நாட்டு நல்ல தம்பி மேலகரை அரைய நாட்டு வேலப்பன் கிலங்த நாட்டு கண்டியன்னல் தட்டய நாட்டு ருசியன்னன் வாரக்க நாட்டு காளியன்னன் அண்ட நாட்டு கன்னப்பன் ஆனைமலே நாட்டு குப்பன்ன காவடிக்க நாட்டு வள்ளியன்ன போங்கலூர் நாட்டு குர்னப்பன் ஆறு நாட்டு ருயப்பன் குருப நாடு செம்பனன்ன கஞ்சி வொடு வங்க நாட்டு வாரணவாசி காசி பரிதி பன்னி நாட்டு பெரியன்னன் வாழ வந்தி நாட்டு திருமலே ருசிபுரம் நாட்டு அத்தியன்னன் கோய வெலப்பன் -குயி விருமன் =புனே -குப்பன் =மொரு—முதலி= திரு = வேலப்பன் =குன்றி=குப்பன் = சாம = பெரியன்னன் = அன்னி=ருசியன்னன்.

## யிருவத்தி நாலு நாட்டுப் பட்டயம்

இப்பட்டயம் நாமக்கல்லில் உள்ள வேட்கோவர் குடியில் வாழவந்தி நாட்டுப் பூசாரி அவர்களின் கோயில் வீட்டில் உள்ளது. இதைப்படித்து எழுதியவர் நாமக்கல் திரு. என். இராசன் B. Com. அவர்கள்.

பட்டயம் செப்புத் தகட்டால் ஆனது 28·8 செமீ அகலம். 46·1 செமீ நீளம்.

தலைப்பில் தெய்வப்படங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நடுவில் சிவலிங்கம், இடது பக்கம் பெருச்சாளி மீது விநாயகர், வலது பக்கம் மயில் மீது முருகன். பட்டயத்தின் இரண்டு பக்கமும் முழுக்க எழுதப்பட்டுள்ளது.

பட்டயம் இந்தச் செப்புத் தகட்டில் எழுதி சுமார் 250 ஆண்டுகளே இருக்கலாம் எனத் தோற்றுகிறது.

நாடு பிரித்து எழுதிய காலம் கலியுக ஆண்டு 4235 (கி.பி 1029) "ஆனந்த" ஆண்டு பொருந்தி வருகின்றது. கி.பி. 1029 ஆம் ஆண்டு வைகாசி மாதம் பதினைந்தாம் தேதி எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கொங்கு 24 நாட்டுக் வேட்கோவரும் ஒரு நாள் பவானி கூடுதுறையில் சங்கமேசுவரர். வேதநாயகி அம்மன் சந்நதியில் கூடி இப்பட்டயத்தை எழுதி வைத்துக் கொள்கின்றனர். இப்பட்டயத்தில் 24 நாடும் அதில் சேர்ந்த ஊர்கள் சிலவற்றின் பட்டியலும், அந்த நாட்டின் புகழ்மிகு தெய்வக்காப்பும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பட்டயத்தின் முன்னுரை வரலாற்றுக்கு உதவுபடியாக இல்லை. 24 நாடுகளின் பெயர்களைக் கொங்கு மண்டல சதகத்து ஊர்த் தொகையுடன் ஒப்பிட்டு ஆராயலாம். கொங்கு மண்டல சதகத்தைப் பதிப்பித்த ஆசிரியர், ஊர்த்தொகையின் பழம்பாடல் கிடைக்காத பகுதிக்கு தானே பாடிச் சேர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அதை விட எழுத்து மூலமான இப்பட்டயத்தைச் சற்றே உறுதியானதாக எண்ணலாம். இப்பட்டயத்தின் தலையாய நன்மை இது ஒன்று தான்.

பட்டயத்தின் இறுதியில் அன்று பவானித் தலத்தில் கூடிப் பட்டயம் எழுதிய வேட்கோவர்களின் பெயர்கள் கொடுக்கப் பட்டுள்ளன.

இந்தப் பட்டயம் வாழ வந்தி நாட்டுச் செம்மப் புலவன் என்பவரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது.

சென்மப் புலவன் மிகப்பெரிய புலவன். தாந்தீரகத்தில் வல்லவன். மலையாள மோடி வித்தைக்காரர்களை வென்றவன். அவனுடைய நாயின் பெயர் வயிரவன். அவனுடைய சாதனைகளுக்காக அக்கால மன்னர்கள் மானியம் வழங்கியுள்ளனர். வேட்கோவர் குடியைச் சேர்ந்தவன்.

அவனுடைய பெருமைகளை எடுத்துச் சொல்வது "சென்மப் புலவன் பட்டயம்" என்பதாகும். 31 செமீ அகலமும் 51 செமீ நீளமும் கொண்ட ஒரே செப்புத் தகடு இரண்டு பக்கமும் எழுதப் பட்டுள்ளது. தலைப்பில் மதுரை வீரசாமி படமும் இரண்டு அம்மன் படங்களும் எழுதப்பட்டுள்ளன. அப்பட்டயம் பின்னர் வெளியிடப் படும்.

## வேண்டுகோள்

கொங்கு 24 நாட்டைச் சேர்ந்த ஊர்களின் பெயர்கள் பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவை தன் முதல் உருவம் மாறித் திரிந்துள்ளது. அந்தந்தப் பகுதியில் வாழ்கின்ற வாசகர்கள் திரிந்த பெயர்களின் சரியான பெயர்களை எழுதி அனுப்பினால் அவை ஆராய்ச்சிக்கு உதவும். அவற்றை 'கொங்கு' இதழிலும் வெளியிடலாம்.


நல்வாழ்த்துக்கள் !

★

திரு. S. S. சௌந்தரராஜன்

P.W.D. ஒப்பந்தக்காரர்

34, வெங்கடரங்கம் பிள்ளை தெரு,

திருவல்லிக்கேணி,

சென்னை-600005.

நல்வாழ்த்துக்கள் !

தொலைபேசி : 38084

# D. சிவானந்தம்

பொ. ப. து. ஒப்பந்தக்காரர்

18/19, சாம்பையர் தெரு,
சென்னை-600001.

---

நல்வாழ்த்துக்கள் !

# தி. கோவிந்தசாமி நாயக்கர்

பொ. ப. து. ஒப்பந்தக்காரர்.

134, B/1, V. M. தெரு
இராயப்பேட்டை,
சென்னை-600014.

நல்வாழ்த்துக்கள்!

# திரு. R. பக்கிரிசாமி

சிவில் & சானிட்டரி எஞ்சினீரிங்

P.W.D. ஒப்பந்தக்காரர்

★

1, அன்னை நாகம்மாள் தெரு,

ராஜா அண்ணாமலைபுரம்,

சென்னை-600028.

Wrapper printed at typographs madras 600002